ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

# විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
# ஓய்வூதியத் திணைக்களம்
# Department of Pensions

# 2022

## වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව සහ ගිණුම්
## வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள்
## Annual Performance Report & Accounts

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள் - 2022

வாக்கு 253
ஓய்வூதியத் திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10

# பொருளடக்கம்

## 1. நிறுவனம் சார் விபரக் குறிப்பு

1.1. அறிமுகம்....................................................................................................................1

1.2. நோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் ......................................................................2

1.3. முக்கிய செயல்பாடுகள்.................................................................................................3-4

1.4. நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்....................................................................................5-6

1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்..........................................................................................7

## 2. முன்னேற்றம் மற்றும் முன்னோக்கு

விசேட கருத்திட்டம் ..............................................................................................9-25

சவால்கள் ..............................................................................................................25

ஓய்வூதியத் திணைக்களத்தின் முன்னோக்கிப் பயணம் ..................................................26

## 3. 2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன்

3.1. நிதி செயல்திறன் அறிக்கை ...........................................................................................27

3.2. நிதி நிலை அறிக்கை .......................................................................................................28

3.3. காசுப் பாய்ச்சல் அறிக்கை ...................................................................................................29

3.4. நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் ....................................................................................30

3.5. வருவாய் சேகரிப்பில் செயல்திறன் ......................................................................................31

3.6. உருவாக்கப்பட் ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் செயல்திறன் ....................................31

3.7.இந்த திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண
சபைக்கு ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக நி.ஒ. 208...............................32

3.8. நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதில் செயல்திறன் ...................................32

3.9. உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதி கணக்குகள் .................................................33-34

3.10. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2022.12.31 ஆம்

ஆண்டிற்கான வருவாய் கணக்குகள் (மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்க.......35-42

3.11. ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதிய நிதி .......................43-45

3.12. பொது சேவைகள் வருங்கால வைப்பு நிதியின் கணக்கு ..........................................46-47

3.13. கணக்காய்வாளர் அறிக்கை ...........................................................................................48-82

## 4. செயல்திறன் குறிகாட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயல்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)...83-86

**5. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் செயல்திறன்**

5.1. நிலைபேறான வளர்ச்சி இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன ........................87

5.2. நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் சாதனைகள் மற்றும் சவால்கள் .........87-88

**6. மனித வள விவரக்குறிப்பு**

6.1. ஆளணி முகாமைத்துவம் .......................................................................................89

6.3. மனித வள மேம்பாடு ..........................................................................................89-94

**7. இணக்க அறிக்கை** .................................................................................................95-103

# 01
# நிறுவனம் சார் விபரக் குறிப்பு

## 1.1. அறிமுகம்

ஓய்வூதிய திணைக்களம் "அ" தர திணைக்களமாக 1970 அம் ஆண்டில் பொது நிர்வாக அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது பயணத்தில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக பொதுச் சேவையில் ஓய்வூதியம் பெறுவோருக்கும் அவர்களுக்குப் பிந்தைய பயனாளிகளுக்கும் ஓய்வூதிய உரிமைகளை வழங்குவதற்காக செயல்பட்டு வருகிறது.

இலங்கையில் ஓய்வூதியச் சட்டம் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே 1898 இன் 01 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகள் கட்டளை சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றுதொட்டு அரச ஊழியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை நிர்வகிக்கும் பொறுப்பு பொது திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

1972 மே 05 அன்று திருத்தம் செய்யப்பட்டதுடன் மேலும் காலத்துக்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்ட 1934 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதிய ஓய்வூதிய பிரமாணக் குறிப்பிற்கமையவும், 01 ஆம் இலக்க 1898 இன் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிய சட்டம் மற்றும் 18 ஆம் இலக்க 1942 இன் பொது சேவை வருங்கால வைப்பு நிதிய சட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும்இ 44 ஆம் இலக்க 1953 இன் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியச் சட்டம்இ பிரிவேனாவிற்கான ஓய்வூதிய ஒழுங்குமுறைகள்இ உதவி பெறும் படசாலைகள்இ 1981 இன் ஆயுதப்படை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகள் பிரமாணங்கள்இ 18 ஆம் இலக்க 1908 இன் விதவைகள் மற்றும் அனாதைகள் (ஆயுதப் படைகள்) ஓய்வூதியச் சட்டம் ஆகியவற்றிற்கமைய உள்ளூராட்சி ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு குடியியல் ஓய்வூதியம்இ விதவைகள்இ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம்இ ஊனமுற்றோர் ஓய்வூதியம்இ ஆயுதப்படை ஓய்வூதியம் மற்றும் பொது சேவை வருங்கால வைப்பு நிதியம் அகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து கொடுப்பனவுகளையும் மற்றும் அறவீடுகளையும் கண்காணித்தல் ஓய்வூதியத் திணைக்களத்தின் முக்கிய செயல்பாடு ஆகும்.

ஓய்வூதியத் திணைக்களம் 2022 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைத் தாண்டி தனியார் துறையின் உதவியுடன் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் சமூக ரீதியாகவும் நிதி ரீதியாகவும் திருப்திபெற்ற ஓய்வூதியரை உருவாக்க மேற்கூறிய முறைகளுக்கு உட்பட்டு நன்மைகளை வழங்குவதற்கான முன்னோடியாக செயல்பட்டது.

2022 ஆம் நிதியாண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தால் உறுதிசெய்யப்பட்ட சமூக பாதுகாப்பு நலன்களுக்கான பணி தொடர்பாக பௌதீக மற்றும் நிதி நடவடிக்கைகளின் நேர்மறையான அம்சங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட இந்த அறிக்கைஇ 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2. நோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions



### நோக்கு

பொருளாதார மற்றும் சமூக ரீதியில் திருப்தி மிக்கதோர் ஓய்வூதியர் சமுதாயம்



### செயற்பணி

அரச சேவையில் ஓய்வூதியர்களுக்கும் அவர்களின் பயனாளிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைகளைப் பயன்படுத்திஇ தனியார் மற்றும் அரச துறையினர் உள்ளடங்கிய சேவைபெறுநர்களினதும் சேவைவழங்குநர்களினதும் திருப்தியை உயர் மட்டத்தில் உறுதிப்படுத்திஇ சட்ட ரீதியான நலன்களை வழங்குதல்.

### குறிக்கோள்கள்

- ஓய்வூதிய பிரமாணக் குறிப்புஇ விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கட்டளை சட்டம்இ விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம் மற்றும் அத்துடன் தொடர்புடைய ஏற்பாடுகளை அமுல்படுத்துவதனூடாக அவற்றிற்கிணங்க அரச ஊழியர்களின் ஓய்வூதிய பலன்களை வழங்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல்.
- ஓய்வூதியம் தொடர்பான சட்ட கட்டமைப்புகள்இ விதிகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு இணங்க அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதிய உரிமையை வழங்கல்.
- மாதாந்த ஓய்வூதிய சலுகைகளை தொடர்ந்து செலுத்துவதுடன் மொத்த தொகையாக செலுத்தப்படும் நன்மைக்கான உரிமையை முறையாக உருவாக்குதல்.
- அரசு ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியை ஒழுங்குபடுத்துவதிடன் நன்மைகளுக்கான உரிமைகளை உருவாக்குதல்.
- அரசாங்கத்தின் சார்பாக விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கான பங்களிப்புகளை சேகரித்தல் மற்றும் பிற வருவாய்களை சேகரித்தலும் நிர்வகித்தலும.
- ஆயுதப்படைகளின் ஓய்வூதியம் மற்றும் பிந்தைய நன்மைகளை நிர்வகித்தல்.
- சேவையின் போது காணாமற்பொன மற்றும் ஊனமுற்ற முப்படைகள் மற்றும் இலங்கை காவல்துறை உறுப்பினர்களுக்கு இழப்பீடுஇ சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- சமூக பாதுகாப்பின் உலகளாவிய போக்குகளைப் ஆராய்ந்து நவீன சமூக பாதுகாப்பு முறைமைக்கான கொள்கைகளை வகுக்க உதவுதல்.
- ஆண்டு வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றத்திற்கு பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும்.
- தேசிய ஓய்வூதியர் தினத்தை நடத்துதல்.

## 1.3. முக்கிய செயல்பாடுகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் பங்கு 04 முக்கிய செயல்முறைகளின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

### 1.3.1. ஓய்வூதியம் மற்றும் நன்மைகளை வழங்குதல்

**I. அரச மற்றும் நீதித்துறை அலுவலர்களை ஓய்வூதிய உரிமை உள்ளவர்களாக்குதல்**

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அரச ஊழியர்கள், நீதித்துறை அலுவலர்கள், பிரிவேனாக்களின் ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவற்றிற்கு உரிமையுள்ளவர்களாக்கும்பொருட்டு "ட" அட்டவணையில் உள்ளடக்கல்.

**II. ஆயுதப்படை அங்கத்தவர்களை ஓய்வூதிய உரிமை உள்ளவர்களாக்குதல்**

ஆயுதப்படைகளின் அலுவலர்கள் மற்றும் பிற தரநிலை அணிகளில் உள்ளவர்களை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக்கு தகுதியுடையவர்களாக்குவதுடன் ஊனமுற்ற ஓய்வூதியம் மற்றும் தங்கி வாழ்வொருக்கான கொடுப்பனவுகளுக்கு உரிமை பெறுக்கொடுத்தல்.

**III. விதவைகள் மற்றும் அனாதைகள் அல்லது தபுதாரர் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய உரிமைகளை வழங்குதல்**

சிவில் அலுவலர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் ஆயுதப்படைகளின் உறுப்பினர் ஆகியோரின் மறைவுக்குப் பிறகு விதவைகள் அல்லது தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியங்களை வழங்குதல், கடமையின போது மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இறந்த அலுவலர்களின் மரணப் பணிக்கொடை மற்றும் அனாதைகள் மற்றும் ஊனமுற்ற ஓய்வூதியம் ஆகியவற்றிற்கு உரிமை பெறுக்கொடுத்தல்

**IV. அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் நன்மைகளுக்குகான உரிமைகளை பெற்றுக் கொடுத்தல்**

பொது சேவையில் ஓய்வூதியம் பெறாத நியமனங்களை கொண்டுள்ளவர்களுக்கு சேவையை நிறுத்தும் போது நன்மைகளை வழங்கல்.

### 1.3.2. கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தல்

ஓய்வூதியம், விதவைகள் , தபுதாரர் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியம் மாதாந்தம் வழங்குதல், அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் சலுகைகளை செலுத்துதல், விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியத்தின் பங்களிப்புகளைத் திருப்பிச் செலுத்துதல், ஓய்வூதிய பணக்கொடை மற்றும் மரணப் பணக்கொடை செலுத்துதல், வாரிசுகளுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துதல், ஓய்வூதிய உரிமைகள் இல்லாமல் சேவையை விட்டு வெளியேறும் ஆயுதப்படைகளின் அதிகாரிகளின் சேவை பணிக்கொடை மற்றும் சிவில் சேவை பணிக்கொடை தயாரித்தல், மற்றும் வெளிநாட்டில் வாழும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சிறப்பு இழப்பீடுகள் செலுத்துதல் போன்ற கொடுப்பனவுகள் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல்.

### 1.3.3. பெறுகைகளை ஒழுங்குபடுத்தல்

உள்ளூராட்சி விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் நிதி, உள்ளூராட்சி அரசு சேவைகள் ஓய்வூதிய நிதி, அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியத்தின் பங்களிப்புகள், கட்டிடங்களுக்கான வாடகை மற்றும் விடுமுறை விடுதியிலிருந்து பெறப்படும் வருமானம் போன்றவற்றின் பெறுகைகளை ஒழுங்குபடுத்துதல்.

### 1.3.4. அபிவிருத்தி அணுகுமுறை

நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அரசாங்கத்தின் கொள்கை கட்டமைப்பை அடைவதை நோக்கமாகக் கொண்ட கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு உதவியை உறுதி செய்தல், சமூக பாதுகாப்புக் கொள்கைகள் குறித்த நிலையான தொடர் ஆய்வுகளை உறுதிசெய்தல், ஓய்வூதியத் திணைக்களத்தில் நன்மைகளைப் பெறுபவர்களுக்கு சிறப்பு சலுகைகளுக்கு உரிமை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல், அரசாங்கத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

## 1.4. நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம்



## இல் ஓய்வூதியத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி – 2022.12.31

| பதவியின் தன்மை | பதவி | பொருந்தும் சேவை | ஊதிய நிலை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் மொத்த எண்ணிக்கை | உள்ள பதவியணி | வெற்றிடமாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிரேஸ்ட தரம் | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (விசேடம்) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மேலதிக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (விசேடம்) | SL-3-2016 | 1 | 1 | 0 |
| | மருத்துவ அலுவலர் (ஒப்பந்த அடிப்படையில்) | ஆரம்ப நிலை | SL-2-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (வகுப்பு I) | SL-1-2016 | 4 | 1 | 3 |
| | பிரதம கணக்காளர் | SLAcS (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SLAcS (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | பிரதி பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | SLAS (வகுப்பு II or III) | SL-1-2016 | 10 | 12 | -2 |
| | கணக்காளர் | SLAcS (வகுப்பு I) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணக்காளர் | SLAcS (வகுப்பு II or III) | SL-1-2016 | 9 | 7 | 2 |
| | பிரதி பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் | SLIT S வகுப்பு II or III) | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | சட்ட அலுவலர் | திணைக்கள | SL-1-2016 | 1 | 1 | 0 |
| | கணினி மென்பொருள் உருவாக்குநர் (ஒப்பந்த அடிப்படையில்) | திணைக்கள | | 3 | 1 | 2 |
| | | | | **34** | **27** | **07** |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியோகத்தர் | PMAS (விசேட) | MN-7-2016 | 4 | 2 | 2 |
| | * மொழிபெயர்ப்பாளர் சிங்களம்-தமிழ் 01 & சிங்களம்- தமிழ் 01 | TS | MN-6-2016 | 2 | 2 | 0 |
| | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப அலுவலர் | SLICTS | MN-6-2016 | 5 | 2 | 3 |
| | | | | **11** | **6** | **5** |
| இரண்டாம் நிலை | தொழில்நுட்ப அலுவலர் | SLTS | MN-3-2016 | 1 | 0 | 1 |
| | பாதீட்டு உதவியாளர் | RS | MN-4-2016 | 1 | 0 | 1 |
| | ஓய்வூதிய அலுவலர் | Dept. | MN-4-2016 | 202 | 188 | 14** |
| | அபிவிருத்தி அலுவலர் | DOS | MN-4-2016 | 536 | 582 | -46*** |
| | முகாமைத்துவ சேவைகள் அலுவலர் | MSO | MN-2-2016 | 190 | 154 | 36 |
| | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப அலுவலர் | SLICTS | MT-1-2016 | 5 | 2 | 3 |
| | ஆவண உதவியாளர் | Dept. | MN-1-2016 | 141 | 119 | 22** |
| | உதவி மேசை உதவியாளர் | Dept. | | 2 | 0 | 2 |
| | | | | **1078** | **1045** | **33** |
| ஆரம்ப நிலை | விடுதிக் காப்பாளர் | Dept. | PL-1-2016 | 2 | 1 | 1 |
| | சமையல்காரர் / தோட்டக்காரர் | Dept. | PL-1-2016 | 4 | 3 | 1 |
| | சாரதி | DS | PL-3-2016 | 12 | 7 | 5 |
| | மின்சார நிபுணர் | Dept. | PL-3-2016 | 1 | 0 | 1 |
| | அலுவலக ஊழியர் | OES | PL-1-2016 | 56 | 34 | 22 |
| | | | | **75** | **45** | **30** |
| மொத்தம் | | | | **1198** | **1123** | **75** |

*மொழிபெயர்ப்பாளர் சேவையில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை - ஆங்கிலம்/ தமிழ் - 01, சிங்களம்/ ஆங்கிலம் - இல்லை

**ஓய்வூதிய அலுவலர்கள் மற்றும் ஆவண உதவியாளர்கள் மேலும் பணியமர்த்தப்பட மாட்டார்கள்.

***ஓய்வூதியத் திணைக்களத்தின் ஊழியர் குழாமிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேலதிகப் பணியாளர்களை உள்ளடக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

## 1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்

1. நிர்வாகப் பிரிவு
2. பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு.
3. மையப்படுத்தப்பட்ட ஓய்வூதியப் பிரிவு
4. சத்கார பியஸ்ஸ
5. விசாரணை பிரிவு
6. கோள்கைப் பிரிவு
7. ஆயுத சேவைகள் ஓய்வூதியப் பிரிவு
8. வேளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு
9. விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு
10. கணக்குப் பிரிவு
11. மாதாந்தக் கொடுப்பனவுப் பிரிவு
12. பணிக் கொடைக் கொடுப்பனவுப் பிரிவு
13. முரண்பாடுகள் பிரிவு
14. விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு நிதிய முகாமைத்துவப் பிரிவு
15. பெறுகைகள் பிரிவு
16. மேலதிக கொடுப்பனவு மீட்டெடுத்தற் பிரிவு
17. பொதுச் சேவைகள் வருங்காலவைப்ப நிதியம்
18. சட்டப் பிரிவு
19. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
20. தகவல் தொழில் நுட்பப் பிரிவு
21. ஊடகப் பிரவு
22. அஞ்சல் பிரிவு
23. 1970 - ஹாட்லைன் துறை

## 02
## முன்னேற்றம் மற்றும் முன்னோக்கு

### விசேட கருத்திட்டம்

- **அரசு அலுவர்களின் கட்டாய ஓய்வு வயது திருத்தம்.**

அரசமைப்புச் சட்டம் அல்லது வேறு எதேனும் சட்டத்தால் நிர்ணயிக்கப்படாத அலுவலர்களைத் தவிர அனைத்து அரசு அலுவலர்களினதும் கட்டாய ஓய்வு வயது 2022. 01.01 ஆம் திகதி முதல் 65 வயது வரை நீட்டிக்கப்பட்டது. எது எவ்வாறாயினும், 2022.09.12 ஆம் திகதிய 22/1403/605/014 ஆம் இலக்க அமைச்சரவை முடிவு மூலம் கட்டாய ஓய்வு வயதெல்லை 60 வயதாக மீண்டும் கொண்டுவரப்பட்டு 2023.01.01 ஆம் திகதியிருந்து நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 2022.12.05 ஆம் திகதிய 2309/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஓய்வூதியம் பிரமாணக் குறிப்பின் 17 ஆம் பிரிவு திருத்தப்பட்டது.

- **“Q” அட்டவணையின் கீழ் பட்டியலிடப்பட்ட பதவிகள் தொடர்பான ஓய்வூதிய உரிமைக்கு தேவையான குறைந்தபட்ச சேவை காலத்தை நீட்டித்தல்.**

"Q" அட்டவணையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பதவிகளுக்கான ஓய்வூதிய உரிமையை வழங்குவதற்கு குறைந்தபட்ச சேவைக் காலத்தை 10 ஆண்டுகள் என திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **கைரேகை முறையில் வருடாந்த உயிர் வாழ்ச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும் வசதி மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.**

02/2020 (திருத்தம் VII) ஆம் இலக்க 2022.02.01 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை மூலம் செலான் வங்கியின் 75 கிளைகள் ஊடாகவும், 02/2020 (திருத்தம் VIII) ஆம் இலக்க 2022.11.21 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கை மூலம் இலங்கை வங்கியின் 90 கிளைகள் ஊடாகவும் கைரேகை முறையில் உயிர்வாழ்ச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதற்கான வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது, இந்த வசதி 26 பிரதேச செயலகங்களிலும், பான் ஏசியா வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிராந்திய வங்கிக் கிளைகள், செலான் வங்கி மற்றும் இலங்கை வங்கி போன்ற 476 வங்கிக் கிளைகளிலும் உள்ளது.




**கைரேகை முறையில் வருடாந்த உயிர் வாழ்ச் சான்றிதழ்களை வழங்குவதற்கு செலான் வங்கியில் செய்யப்பட்ட வசதி.**

- **ஓய்வூதியர்களுக்கு மாதாந்த உதவித்தொகை ரூ.5,000 வழங்குதல்**

2022.01.03 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2022.01.20 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க தேதியிட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை 01/2022 ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கு உட்படாத ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 578,610 ஓய்வூதியர்களுக்கு ரூ.34,747 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

- **முப்படைகளின் ஓய்வூதிய உரிமைகளை வழங்குதலை இலகுவாக்கல்**
  - 2022.06.27 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை மூலம் சேவைக் பணிக்கொடைகள் மற்றும் முப்படைகளின் விசேட இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்களை முகாமை செய்வதற்கான இயங்கலை முறையை அறிமுகப்படுத்துகிறது.
  - 2022.03.10 ஆம் திகதிய 02/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையனூடாக 1981 இன் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் பிரமாணத்தின் விதிமுறைகளின் கீழ் சார்ந்திருப்பவர்களின் உதவித்தொகைக்கான உரிமையை வழங்குவதற்கான புதிய விண்ணப்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
  - 2022.07.22 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையனூடாக, போர்க் காலத்தில் இறந்த காவல்துறை அலுவலர்களின் தங்கிவாழ்பவர்களுக்கு வழங்கப்படும் நிலையான கொடுப்பனவு தொடர்பான விபரங்களை இயங்கலையில் திருத்துவதற்கான வசதிகள் தொடர்புடைய குறித்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
  - முப்படையினரின் மரண உதவித்தொகைக்கான கொடுப்பனவுகளுக்கு இயங்கலையினூடாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்**

விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு முன்பு பின்பற்றப்பட்ட முறையான அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் இணைப்புகளைச் அஞ்சல் மூலம் சமர்பிக்கும் முறையை மாற்றி, 2022.10.06 ஆம் திகதிய 02/2006 (திருத்தம் I) ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையனூடாக ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களை இயங்கலையின் மூலம் சமர்ப்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- **ஓய்வூதியத் திருத்தம் (PD6)**

2022.09.14 ஆம் திகதிய 05/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதிய விண்ணப்பத்தை (PD6) சமர்ப்பிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

- **ஓய்வூதியத்தின் மிகைக் கொடுப்பனவுகளை நிர்வகித்தல்**

2022.06.10 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் படி , ஓய்வூதியக் கொடுப்பனவுகளின் முகாமைத்துவ நிலையில் அடையாளம் காணப்பட்ட அதிகப்படியான கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **வெளிநாடு செல்லும் அலுவலர்களின் விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய பங்களிப்புகளை சேகரித்தல்**

14/2022, 14/2022(I) 14/2022(II) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் 2022.09.19 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை ஆகியவற்றுக்கமைவாக விசேட விடுப்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்கள் தமது விடுமுறைக் காலத்திற்கான பங்களிப்புகளை சேகரித்து வைப்பிலிடுவதற்கான புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- **ஓய்வூதிய கொடுப்பனவுகளை பரவலாக்குதல்**

- கோவிட் 19 தொற்று நிலைமை மற்றும் நாட்டில் எரிபொருள் நெருக்கடி நிலவியமை காரணமாக நேர்காணலில் கலந்து கொள்ள முடியாத ஓய்வூதியர்களது ஓய்வூதிய கொடுப்பனவுகளை செயல்படுத்துவதற்காக ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை குறிப்பிட்ட பிரதேசங்களில் ஓய்வூதியர்களுக்கு நேர்காணல்களை நடத்துவதற்காக ஓய்வூதிய கொடுப்பனவுகளை செயல்படுத்துவதற்கான நேர்காணல் செயல்முறையை பரவலாக்குவதற்கான முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் காலிஇ மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில் நடைபெற்றது.

- நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரிப்பால் ஓய்வூதியம் பெறுவோர் மீது ஏற்படும் சுமைகளுக்கு தீர்வாகஇ அக்டோபர் 8 ஆம் தேதி தேசிய ஓய்வூதியர் தினத்தை ஒட்டிஇ ஓய்வூதிய கொடுப்பனவுகளை செயல்படுத்த மாவட்ட அளவில் நேர்காணல் செயல்முறையை பரவலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படிஇ மாத்தறைஇ அனுராதபுரம்இ கண்டிஇ குருநாகல் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







**மாத்தறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஓய்வூதிய கொடுப்பனவுகளை செயற்படுத்தும் பரவலாக்கல் வேலைத்திட்டம்**

- **தேசிய ஓய்வூதியர் தின நினைவு தினம்**

நாட்டில் நிலவும் நெருக்கடியான பொருளாதார நெருக்கடியின் காரணமாக வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, ஒரு தொடக்க நிகழ்ச்சியாக சிரேஷ்ட ஓய்வூதிய சமுதாயத்திற்காக வழங்கப்படும் சேவைகளை பரவலாக்குவதன் மூலம் தேசிய ஓய்வூதியர் தினத்தை முன்னிட்டு பொதுச் செலவுகளைக் குறைக்க ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

- **பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்**

பல்வேறு அரச நிறுவனங்களில் உள்ள விடய உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள கணக்காளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதிய தரவுத்தளத்தின் முகாமைதுவம் சம்பந்தமான கடமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இணையவழியில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், 14/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி வெளிநாடுகளுக்குச் செல்லும் அலுவலர்களின் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புகளை இயங்கலை மூலமாகவும் அனுப்பும் இரு புதிய முறைமை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய சுமார் 8000 உத்தியோகத்தர்களுக்காக ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 38 பயிற்சி நிகழ்ச்சிகள் இயங்கலை மூலம் நடத்தப்பட்டன. மேலும், திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ யூடியூப் அலைவரிசை, உத்தியோகபூர்வ முகநூல் மற்றும் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக வெளி தரப்பினருக்கு இந்தப் பயிற்சித் திட்டங்களை அவதானிக்க வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- களஆய்வுக்காக திணைக்களத்திற்கு வருகை தந்த திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் அகாடமியின் உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு முறை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.






**2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்**

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றறிக்கை இல. | விடயம் |
|---|---|---|---|
| 01 | 20.01.2022 | 01/2022 | ஓய்வூதியர்களுக்கு மாதாந்த உதவித்தொகை ரூ.5,000/- வழங்குதல் |
| 02 | 31.02.2022 | 03/2015(திருத்தம்VII) | ஓய்வு பெறும் திகதியில் ஓய்வூதிய நன்மைகளைப் பெறுதல் (ஓய்வூதிய விண்ணப்பங்களை இயங்கலையில் சமர்ப்பித்தல்) |
| 03 | 01.02.2022 | 02/2020 (திருத்தம்VII) | கைரேகைகள் மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களின் உயிர்வாழ்க்கைச் சான்றிதழை உறுதிப்படுத்துதல் - முன்னோடி திட்டம். |
| 04 | 10.03.2022 | 02/2022 | 1981 இன் இராணுவம்/ கடற்படை/ விமானப்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை விதிகளின்படி சார்ந்திருப்பவர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல். |
| 05 | 28.04.2022 | 11/2009 (திருத்தம்II) | 11/2009 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை: வங்கி வலையமைப்பின் மூலம் அரசாங்க ஓய்வூதியத்தை செலுத்துதல். (ஓய்வூதியர்களுக்கான தனிப்பட்ட வங்கி கணக்குகளை பராமரித்தல்) |
| 6 | 29.04.2022 | 04/2013 (திருத்தம்IV) | ஓய்வூதிய சமூகத்தின் பொருளாதார நலனுக்கான கடன் வசதி |
| 7 | 10.06.2022 | 03/2022 | வழங்கப்பட்ட அதிக ஓய்வூதியத்தை அறவிடலும் ஓய்வூதிய மோசடிகள் மீது நடவடிக்கை எடுத்தலும். |
| 8 | 27.06.2022 | 04/2022 | முப்படைகளில் சேவைப் பணிக்கொடை மற்றும் இழப்பீடுகளை செலுத்துவதற்கான விண்ணப்ப முகாமைத்துவ அமைப்பு அறிமுகம் |
| 9 | 13.09.2022 | 05/2022 | ஓய்வுக்குப் பிறகு பல்வேறு காரணங்களால் செய்யப்படும் ஓய்வூதியத் திருத்தம் (PD 06). |
| 10 | 19.09.2022 | 06/2022 | 14/2022 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, வெளிநாடுகளுக்குச் செல்கின்ற அலுவலர்களிடமிருந்து விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகளை பெறுவதற்கான வழிமுறைகள். |
| 11 | 06.10.2022 | 02/2016 (திருத்தம்I) | இணையம் மூலம் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பித்த முறையை மறுபரிசீலனை செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| 12 | 07.10.2022 | 03/2015 (திருத்தம்VIII) | ஓய்வு பெற்ற அதே நாளில் ஓய்வூதிய பலன்களை வழங்கல் |
| 13 | 10.10.2022 | 07/2020(I) | ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதியம் பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில் பாதுகாவலரை நியமிப்பதற்கான உடன்படிக்கை |
| 14 | 03.11.2022 | 08/2022 | ஓய்வூதியம் பிரமாணக் குறிப்பின் 36 ஆம் பிரிவின் கீழ் வாரிசுகளுக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்குதல் |
| 15 | 08.11.2022 | 09/2022 | 2023 ஆம் ஆண்டில் ஓய்வூதியக் கொடுப்பனவு |
| 16 | 21.11.2022 | 02/2020(திருத்தம்VIII) | கைரேகை மூலம் ஓய்வூதியர்களின் உயிர் வாழ்ச் சான்றிதழை உறுதிப்படுத்துதல் – முன்னொடிக் கருத் திட்டம் |

**2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதங்கள்**

| | வெளியிடப்பட்ட திகதி | அறிவுறுத்தல்க் கடித இல. | விடயம் |
|---|---|---|---|
| 1 | 09.03.2022 | 03/2020 (II) | 3/2020 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் படி விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் தயாரிப்பதற்கான வழிமுறை கையேடு (II) |
| 2 | 11.03.2022 | 01/2022 | அரச உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 வயது வரை உயர்த்துதல் |
| 3 | 22.04.2022 | 02/2022 | ஓய்வூதியம் செலுத்துவதற்காக, தவறவிடப்பட்ட ஓய்வூதிய கோவைகளுக்கான தற்காலிக கோவையைத் தயாரித்தல் |
| 4 | 26.04.2022 | 03/2022 | யுத்த காலத்தில் உயிரிழந்த முப்படை மற்றும் விசேட அதிரடிப்படை உறுப்பினர்களைத் தங்கி வாழ்பவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் |
| 5 | 08.06.2022 | 04/2022 | விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பழைய இலக்க பிரிவு 82/83 மற்றும் M/F இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட பழைய உறுப்பினர்களின் மறுபதிவு |
| 6 | 28.06.2022 | 05/2022 | 2017.01.01 ஆம் திகதிக்குப் பிறகு ஓய்வு பெற்ற அலுவலர்களின் ஓய்வூதியத் திருத்தம். |
| 7 | 05.10.2022 | 06/2022 | ஓய்வூதிய நலன்களை விரைவாக வழங்குதல் |
| 8 | 08.12.2022 | 07/2022 | ஓய்வூதியர்களின் உயிர்வாழ்க்கைச் சான்றிதழ்கள் - 2023 |
| 9 | 13.12.2022 | 08/2022 | ஓய்வூதிய முகமைத்துவம் |
| 10 | 30.12.2022 | 07/2022(I) | ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உயிர்வாழ்ச் சான்றிதழ் – 2023 |

**2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓய்வூதியம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புகள்**

| | வர்த்தமானி இல. | விடயம் | வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1 | 2263/5 | ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 2AA மற்றும் 17ஐ முழுமையாக நீக்கி, புதிய பிரிவுகளை மாற்றியமைப்பதன் மூலம் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினை மேலும் திருத்துதல். | 19.01.2022 |
| 2 | 2309/04 | பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – 01.01.2023 முதல் நடைமுறைக்கு வரும் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பு (திருத்தம்). | 05.12.2022 |
| 3 | 2310/07 | மருத்துவ ஆலோசகர்கள் / அரச மருத்துவ உத்தியொகத்தர்கள்/ பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் / அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அலுவலர்கள் ஆகியோரின் கட்டாய ஓய்வு வயது திருத்தம் | 12.12.2022 |

- **ஓய்வூதியம் கொடுப்பனவு**

  - **மாதாந்த கொடுப்பனவுகளில் குடியியல், ஆயுதப்படைகள், விதவைகள் மற்றும் அனாதைகளின் ஓய்வூதியங்களின் எண்ணிக்கை**

| மாதம் | குடியியல் | ஆயுதப்படை | விதவைகள் அனாதைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 368,036 | 119,689 | 184,323 | 672,048 |
| பிப்ரவரி | 368,478 | 119,945 | 184,767 | 673,190 |
| மார்ச் | 368,583 | 120,302 | 184,724 | 673,609 |
| ஏப்ரல் | 369,202 | 120,808 | 185,240 | 675,250 |
| மே | 369,083 | 120,991 | 185,096 | 675,170 |
| ஜூன் | 368,599 | 121,057 | 185,351 | 675,007 |
| ஜூலை | 368,758 | 121,616 | 185,249 | 675,623 |
| ஆகஸ்ட் | 368,751 | 121,614 | 185,249 | 675,614 |
| செப்டம்பர் | 366,005 | 122,795 | 183,541 | 672,341 |
| அக்டோபர் | 366,275 | 123,320 | 183,796 | 673,391 |
| நவம்பர் | 366,669 | 123,896 | 184,667 | 675,232 |
| டிசம்பர் | 366,897 | 124,125 | 185,408 | 676,430 |

  - **வருடாந்த ஓய்வூதிய செலவு**

| வருடம் | செலவினம் (ரூ.'000) |
|---|---|
| 2018 | 194,494,730 |
| 2019 | 238,689,183 |
| 2020 | 257,833,481 |
| 2021 | 269,827,125 |
| 2022 | 309,066,783 |

- செயல்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியங்களின் எண்ணிக்கை (ஜனவரி - டிசம்பர்)

| மாதம் | குடியியல் | | வி.அ.ஓ | | ஆயுதப்படை | |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர் எண் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | ஓய்வூதியர் எண் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | ஓய்வூதியர் எண் | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) |
| ஜனவரி | 1047 | 210,139,462.58 | 709 | 174,219,968.62 | 426 | 76,529,674.23 |
| பிப்ரவரி | 1562 | 406,144,968.39 | 1248 | 294,422,360.47 | 898 | 157,137,754.50 |
| மார்ச் | 1194 | 351,490,228.27 | 756 | 179,414,724.29 | 619 | 127,108,797.83 |
| ஏப்ரல் | 1658 | 493,499,297.71 | 1291 | 327,988,991.01 | 690 | 173,632,265.76 |
| மே | 738 | 228,306,678.38 | 509 | 133,515,697.34 | 290 | 60,277,828.00 |
| ஜூன் | 531 | 204,053,878.16 | 983 | 267,227,426.76 | 248 | 68,376,276.49 |
| ஜூலை | 1260 | 428,490,029.69 | 757 | 189,432,089.25 | 759 | 154,722,261.77 |
| ஆகஸ்ட் | 520 | 212,485,849.19 | 583 | 141,457,671.86 | 833 | 145,919,509.51 |
| செப்டம்பர் | 1347 | 500,674,485.95 | 1027 | 268,364,124.45 | 921 | 208,243,561.67 |
| அக்டோபர் | 1037 | 395,126,204.54 | 731 | 214,884,663.71 | 588 | 142,432,817.07 |
| நவம்பர் | 1153 | 440,148,302.58 | 1425 | 370,642,531.94 | 647 | 178,823,124.26 |
| டிசம்பர் | 1331 | 455,272,914.42 | 1414 | 335,909,031.56 | 601 | 160,527,041.87 |
| **மொத்தம்** | **13,378** | **4,325,832,299.86** | **11,433** | **2,897,479,281.26** | **7,520** | **1,653,730,912.96** |

- ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை மற்றும் மாவட்ட அடிப்படையில் செலவு - டிசம்பர் 2022

| மாவட்டம் | ஓய்வூதியர் எண். | தொகை (ரூ.) | குறைத்தல் | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|
| முல்லைத்தீவு | 1142 | 39,172,331.53 | 526,239.59 | 38,646,091.94 |
| கிளிநொச்சி | 1231 | 40,004,619.31 | 253,285.51 | 39,751,333.80 |
| மன்னார் | 1668 | 58,871,408.97 | 2,097,822.78 | 56,773,586.19 |
| வவுனியா | 2908 | 103,276,063.55 | 671,169.54 | 102,604,894.01 |
| வெளிநாட்டில் | 6756 | 228,067,807.80 | 1,477,690.42 | 226,590,117.38 |
| திருகோணமலை | 8269 | 289,919,316.41 | 1,964,154.67 | 287,955,161.74 |
| மட்டக்களப்பு | 8633 | 319,985,270.68 | 2,737,599.20 | 317,247,671.48 |
| நுவரெலியா | 11375 | 400,735,729.59 | 3,498,010.38 | 397,237,719.21 |
| பொலன்னறுவை | 11699 | 406,815,469.17 | 5,264,930.55 | 401,550,538.62 |
| மொனராகலை | 11719 | 397,417,454.30 | 5,181,389.35 | 392,236,064.95 |
| அம்பாறை | 13441 | 492,179,042.43 | 4,548,680.21 | 487,630,362.22 |
| யாழ் | 15002 | 546,399,287.32 | 1,954,085.75 | 544,445,201.57 |
| புத்தளம் | 15571 | 556,786,482.84 | 5,307,124.43 | 551,479,358.41 |
| ஹம்பாந்தோட்டை | 16600 | 588,267,961.47 | 5,871,615.19 | 582,396,346.28 |
| மாத்தளை | 17990 | 652,040,377.83 | 4,178,049.58 | 647,862,328.25 |
| இரத்தினபுரி | 23004 | 830,612,013.96 | 8,031,322.18 | 822,580,691.78 |
| பதுளை | 27298 | 980,426,187.25 | 12,924,308.86 | 967,501,878.39 |
| மாத்தறை | 27644 | 996,445,867.11 | 7,076,205.36 | 989,369,661.75 |
| கேகாலை | 32771 | 1,192,854,038.65 | 9,968,780.43 | 1,182,885,258.22 |
| அனுராதபுரம் | 37661 | 1,388,296,454.20 | 19,559,396.46 | 1,368,737,057.74 |
| காலி | 38519 | 1,380,171,566.84 | 11,705,135.47 | 1,368,466,431.37 |
| களுத்துறை | 44465 | 1,593,742,643.95 | 2,010,315.20 | 1,581,732,328.75 |
| கண்டி | 59300 | 2,175,134,747.86 | 15,572,164.33 | 2,159,562,583.53 |
| குருநாகல் | 65330 | 2,410,574,457.20 | 14,552,402.08 | 2,396,022,055.12 |
| கம்பஹா | 88135 | 3,154,922,620.38 | 25,063,854.75 | 3,129,858,765.63 |
| கொழும்பு | 88299 | 3,317,315,310.98 | 22,802,910.42 | 3,294,512,400.56 |
| மொத்தம் | **676430** | **24,540,434,531.58** | **204,798,642.69** | **24,335,635,888.89** |

- **பணிக்கொடை செலுத்துதல் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | ஓய்வூதியர் எண் | தொகை (ரூ.) |
|---|---|---|
| ஜனவரி | 1,143 | 1,202,514,790.77 |
| பிப்ரவரி | 423 | 383,034,977.95 |
| மார்ச் | 1,679 | 1,674,231,700.16 |
| ஏப்ரல் | 1,353 | 1,090,411,292.93 |
| மே | 1,395 | 1,405,954,185.22 |
| ஜூன் | 1,456 | 1,524,487,586.42 |
| ஜூலை | 1,165 | 1,105,409,323.42 |
| ஆகஸ்ட் | 2,960 | 2,951,965,604.90 |
| செப்டம்பர் | 3,038 | 2,625,813,347.96 |
| அக்டோபர் | 2,220 | 2,319,960,477.92 |
| நவம்பர் | 1,905 | 2,323,816,621.16 |
| டிசம்பர் | 2,462 | 2,570,384,716.22 |
| **மொத்தம்** | **21,199** | **21,177,984,625.03** |

- **2022 ஆம் ஆண்டில் (ஜனவரி - டிசம்பர்) ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் எண்ணிக்கை**

| மாதம் | குடியியல் | ஆயுதப்படை |
|---|---|---|
| ஜனவரி | - | 0 |
| பிப்ரவரி | 67 | 349 |
| மார்ச் | 188 | 340 |
| ஏப்ரல் | 520 | 415 |
| மே | 328 | 213 |
| ஜூன் | 178 | 165 |
| ஜூலை | 710 | 665 |
| ஆகஸ்ட் | 237 | 758 |
| செப்டம்பர் | 804 | 807 |
| அக்டோபர் | 631 | 512 |
| நவம்பர் | 758 | 536 |
| டிசம்பர் | 966 | 487 |
| **மொத்தம்** | **5,387** | **5,247** |

- அக்ரஹாரா இன்சூரன்ஸ் திட்டத்திற்கான அங்கத்தவர்கள் (ஜனவரி - டிசம்பர்)

| மாதம் | பழைய ஓய்வூதியம் | | புதிய ஓய்வூதியம் | | மொத்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர் எண்ணிக்கை | தொகை | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூ.) | | |
| ஜனவரி | 99,887 | 20,510,800 | 1,032 | 1,063,000 | 100,919 | 21,573,800 |
| பிப்ரவரி | 100,854 | 20,343,400 | 1,546 | 2,096,000 | 102,400 | 22,439,400 |
| மார்ச் | 102,370 | 20,605,600 | 1,178 | 1,742,000 | 103,548 | 22,347,600 |
| ஏப்ரல் | 103,514 | 20,831,600 | 1,633 | 2,367,400 | 105,147 | 23,199,000 |
| மே | 105,055 | 21,057,800 | 730 | 1,109,200 | 105,785 | 22,167,000 |
| ஜூன் | 105,660 | 21,181,200 | 512 | 971,800 | 106,172 | 22,153,000 |
| ஜூலை | 105,896 | 21,239,400 | 1,245 | 1,986,400 | 107,141 | 23,225,800 |
| ஆகஸ்ட் | 107,014 | 21,460,400 | 508 | 956,400 | 107,522 | 22,416,800 |
| செப்டம்பர் | 107,222 | 21,507,400 | 1,326 | 2,162,200 | 108,548 | 23,669,600 |
| அக்டோபர் | 108,677 | 21,777,600 | 1,008 | 1,852,000 | 109,685 | 23,629,600 |
| நவம்பர் | 109,570 | 22,014,600 | 1,118 | 2,047,600 | 110,688 | 24,062,200 |
| டிசம்பர் | 110,333 | 22,164,800 | 1,285 | 2,114,200 | 111,618 | 24,279,000 |
| **மொத்தம்** | | **254,694,600** | | **20,468,200** | | **275,162,800** |

- ரூ.5000 (பிப்ரவரி - டிசம்பர்) மாதாந்த உதவித்தொகை பெற்ற ஓய்வூதியர்களின் எண்ணிக்கை

| மாதம் | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|
| பிப்ரவரி | 557,064 | 5,563,860,000.00 |
| மார்ச் | 568,148 | 2,958,163,629.24 |
| ஏப்ரல் | 571,867 | 2,902,398,175.55 |
| மே | 573,395 | 2,899,630,434.97 |
| ஜூன் | 573,825 | 2,905,076,686.92 |
| ஜூலை | 575,307 | 2,915,660,151.16 |
| ஆகஸ்ட் | 575,254 | 2,908,827,695.87 |
| செப்டம்பர் | 574,686 | 2,905,128,006.50 |
| அக்டோபர் | 576,608 | 2,923,598,132.29 |
| நவம்பர் | 577,855 | 2,923,680,139.60 |
| டிசம்பர் | 578,610 | 2,940,916,425.59 |
| **மொத்தம்** | | **34,746,939,477.69** |

- **ஓய்வூதிய முரண்பாடுகள் மற்றும் திருத்தங்கள் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | புள்ளிவிவரங்கள் | மொத்தத் தொகை (ரூ.) |
|---|---|---|
| ஜனவரி | 814 | 72,995,369.57 |
| பிப்ரவரி | 980 | 69,425,071.81 |
| மார்ச் | 1,092 | 29,706,621.23 |
| ஏப்ரல் | 1,525 | 44,472,104.05 |
| மே | 1,274 | 66,907,965.69 |
| ஜூன் | 1,318 | 85,480,671.88 |
| ஜூலை | 1,238 | 73,340,565.10 |
| ஆகஸ்ட் | 819 | 95,242,688.41 |
| செப்டம்பர் | 861 | 77,800,132.07 |
| அக்டோபர் | 897 | 99,156,584.74 |
| நவம்பர் | 1,049 | 102,221,752.09 |
| டிசம்பர் | 844 | 98,516,983.69 |
| **மொத்தம்** | **12,711** | **915,266,510.33** |

- **பங்களிப்புகளைத் திரும்பப் பெறுதல் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | பணத்தைத் திரும்பப்பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 82 |
| பிப்ரவரி | 184 |
| மார்ச் | 453 |
| ஏப்ரல் | 113 |
| மே | 40 |
| ஜூன் | 214 |
| ஜூலை | 252 |
| ஆகஸ்ட் | 263 |
| செப்டம்பர் | 233 |
| அக்டோபர் | 237 |
| நவம்பர் | 179 |
| டிசம்பர் | 350 |
| **மொத்தம்** | **2,600** |

- **கடமையில் இருக்கும் போது இறந்த அல்லது ஊனமுற்ற முப்படை மற்றும் காவல்துறை சேவையில் உள்ள உறுப்பினர்களுக்கான இழப்பீட்டு ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள் - டிசம்பர் 2022 வரை**

| நிறுவனம் | புள்ளிவிவரங்கள் | ஜனவரி முதல் டிசம்பர் 2022 வரை |
|---|---|---|
| | | செலுத்திய தொகை ரூ. பில்லியனில் |
| இராணுவம் | 35,739 | 33.73 |
| கடற்படை | 1,414 | 1.4 |
| விமானப்படை | 521 | 0.45 |
| காவல்துறை | 1,797 | 2.07 |
| நிலையான கொடுப்பனவு செலுத்துதல் | 1,892 | 0.8 |
| ரூ.5000 கொடுப்பனவு | 38,750 | 1.8 |
| **மொத்தம்** | **41,363** | **40.25** |

- **பணிக்கொடை செலுத்துதல்**

| பணிக்கொடை வகை | கொடுப்பனவுகளின் எண்ணிக்கை | செலுத்திய தொகை (ரூ.) |
|---|---|---|
| சிவில், ஆயுதப்படை மற்றும் மையப்படுத்தப்பட்ட | 17,535 | 19,057,302,002.32 |
| சேவைகள் பணிக்கொடை (இறப்பு) | 251 | 227,420,209.25 |
| மரண பணிக்கொடை | 1,618 | 1,216,526,800.57 |
| திருத்தங்கள் | 810 | 23,809,252.57 |
| பிற* | 985 | 652,926,360.32 |
| **மொத்தம்** | **21,199** | **21,177,984,625.03** |

*வசேட இழப்பீடுகள், சேவைகள் பணிக்கொடை, மீண்டும் சேவைக்கு, உள்வாங்கப்பட்டவர்களுக்கான சேவை பணிக்கொடை செலுத்துதல், தொண்டு கொடுப்பனவு

- **விதவை மற்றும் அனாதைகளின் ஓய்வூதிய பலன்களை வழங்குதல்**

| மாதம் | விதவை மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியம் | மரணப் பணிக்கொடை செலுத்துதல் |
|---|---|---|
| ஜனவரி | 676 | 105 |
| பிப்ரவரி | 1211 | 59 |
| மார்ச் | 714 | 92 |
| ஏப்ரல் | 1217 | 143 |
| மே | 485 | 110 |
| ஜூன் | 941 | 143 |
| ஜூலை | 735 | 114 |
| ஆகஸ்ட் | 541 | 144 |
| செப்டம்பர் | 1002 | 159 |
| அக்டோபர் | 686 | 85 |
| நவம்பர் | 1375 | 205 |
| டிசம்பர் | 1396 | 259 |
| **மொத்தம்** | **10,979** | **1,618** |

- **விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்**

விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உறுப்பினர் திட்டத்தில் பதிவு செய்வதற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களில் 2022 ஆம் ஆண்டில் 46,206 விண்ணப்பங்களுக்கு விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உறுப்பினர் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- **ஆயுதப்படை பிரிவு மூலம் மத்திய தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்ட ஓய்வூதியங்களின் எண்ணிக்கை**

| ஓய்வூதிய வகை | கட்டணங்களின் எண்ணிக்கை (இராணுவம்/ கடற்படை/ விமானப்படை) |
|---|---|
| சேவை ஓய்வூதியங்கள் (10/12 ஆண்டுகளுக்கு கீழ்) | 303 |
| ஆயுதப் படைகள் திருத்தங்கள் | 3,170 |
| ஊனமுற்றோர் சேவை ஓய்வூதியம் செலுத்துதல் | 50 |
| திருத்தங்கள் (55 ஆண்டுகள் நிறைவு) | 608 |
| மரணக் பணிக்கொடை | 291 |
| சேவைகள் பணிக்கொடை | 859 |
| சார்ந்திருப்போர் உதவித்தொகை | 308 |
| ஊனமுற்றோர் ஓய்வூதியம் | 16 |
| நிலையான கொடுப்பனவு | 1,318 |
| சிறப்பு இழப்பீடு | 19 |
| மீண்டும் சேவையில் இணைத்தல் | 58 |
| **மொத்தம்** | **7,000** |

- **வெளிநாட்டு ஓய்வூதியர்களின் எண்ணிக்கை ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெறுதல்**

| மாதம் | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|
| ஜனவரி | 8,275 | 259,533,214.74 |
| பிப்ரவரி | 8,375 | 245,033,656.64 |
| மார்ச் | 8,451 | 245,058,618.81 |
| ஏப்ரல் | 8,534 | 295,479,762.20 |
| மே | 8,639 | 249,859,740.63 |
| ஜூன் | 8,737 | 258,705,109.74 |
| ஜூலை | 8,844 | 267,540,183.43 |
| ஆகஸ்ட் | 6,034* | 211,730,666.35 |
| செப்டம்பர் | 6,311 | 207,604,660.25 |
| அக்டோபர் | 6,408 | 213,885,504.28 |
| நவம்பர் | 6,578 | 218,400,474.14 |
| டிசம்பர் | 6,756 | 228,067,807.80 |
| **மொத்தம்** | | **2,900,899,399.01** |

*2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உயிர் வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிக்காததால் 2029 ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது ஆகஸ்ட் மாதத்திலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

- **சம்பளம் மற்றும் பிற நிர்வாகச் செலவுகள்**

| ஆண்டு | தொகை (ரூ.'000) |
|---|---|
| 2017 | 29,005,842 |
| 2018 | 30,909,246 |
| 2019 | 34,262,885 |
| 2020 | 38,107,393 |
| 2021 | 38,591,300 |
| 2022 | 41,003,000 |

- **பொது சேவை வருங்கால வைப்பு நிதிக்கான பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் (ஜனவரி - டிசம்பர்)**

| மாதம் | பெறுகைகள் (ரூ.) | கொடுப்பனவுகள் (ரூ.) |
|---|---|---|
| ஜனவரி | 113,471,954.53 | 14,194,102.51 |
| பிப்ரவரி | 87,568,939.35 | 25,492,177.21 |
| மார்ச் | 86,413,252.78 | 47,595,408.50 |
| ஏப்ரல் | 52,075,403.24 | 31,514,223.67 |
| மே | 75,849,531.62 | 37,207,995.91 |
| ஜூன் | 73,812,426.94 | 40,444,189.96 |
| ஜூலை | 45,365,430.79 | 35,672,736.00 |
| ஆகஸ்ட் | 72,749,991.36 | 46,910,031.22 |
| செப்டம்பர் | 64,385,257.27 | 59,381,608.56 |
| அக்டோபர் | 47,973,517.78 | 19,572,327.36 |
| நவம்பர் | 61,138,804.80 | 63,054,839.21 |
| டிசம்பர் | 59,494,974.45 | 156,804,485.12 |
| **மொத்தம்** | **840,299,484.91** | **577,844,125.23** |

- **பொது சேவை வருங்கால வைப்பு நிதியில் (ஜனவரி - டிசம்பர்) சேர்ந்த புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை**

| மாதம் | புதிதாக இணைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | வெளியேறிய உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜனவரி | 4151 | 447 |
| பிப்ரவரி | 4260 | 431 |
| மார்ச் | 3749 | 505 |
| ஏப்ரல் | 1689 | 432 |
| மே | 1691 | 294 |
| ஜூன் | 853 | 287 |
| ஜூலை | 88 | 275 |
| ஆகஸ்ட் | 4090 | 329 |
| செப்டம்பர் | 2925 | 527 |
| அக்டோபர் | 2178 | 537 |
| நவம்பர் | 2263 | 538 |
| டிசம்பர் | 2912 | 252 |
| **மொத்தம்** | **30,849 *** | **4,854** |

* 2017.10.06 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் படி இயங்கலையில் பதிவு செய்யாத அரச ஊழியர்களின் மீள் பதிவு காரணமாக இந்த ஆண்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

- **சேகரிக்கும் வருவாய் (ஜனவரி - டிசம்பர்)**

| விவரம் | சேகரிக்கப்பட்ட வருவாய் (ரூ.) |
|---|---|
| மத்திய அரசு | 24,040,070,388.77 |
| மாகாண சபைகள் | 13,558,331,489.41 |
| ஆசிரியர்களின் விதவை மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதிய நிதி | 469,816,717.77 |
| **மொத்தம்** | **38,068,218,595.95** |

- **14/2022 ஆம் இலக்க பொ.நி.சு இன் படி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விடுப்பு பெற்ற அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் பங்களிப்புகள்**

| விபரம் | 31.12.2022 நிலவரப்படி இருப்பு (ரூ.) |
|---|---|
| மத்திய அரசு | 299,221.79 |
| மேல் மாகாணம் | 3,687.60 |
| தென் மாகாணம் | 29,656.90 |
| மத்திய மாகாணம் | 22,250.30 |
| ஊவா மாகாணம் | 10,840.20 |
| சப்ரகமுவ மாகாணம் | 6,397.30 |
| வயம்ப மாகாணம் | 2,146.50 |
| வட-மத்திய மாகாணம் | - |
| வட மாகாணம் | 4,000.80 |
| கிழக்கு மாகாணம் | 118,237.70 |
| இனங்காணப்படாதவை | 1,180,487.75 |
| **மொத்தம்** | **1,676,926.84** |

- **அரசாங்கத்திற்கு வருவாய் ஈட்டுதல்**

ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் மூலம் ரூ.26,001,043.11 வும் விடுமுறை விடுதிகளியிருந்து ரூ.1,789,525 வும் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

- **ணைக்கள அலுவலர்களின் திறன் மேம்பாடு மற்றும் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

  - நாட்டில் நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக மேல் மாகாண விவசாய திணைக்களத்தின் உதவியுடன் ஓய்வூதிய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத்தோட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.







மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைவாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளை விநியோகிக்க ஓய்வூதிய திணைக்களத்தின் நலன்புரிச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

- சுகாதார உதவி தேவைப்படும் அலுவலர்களின் சுகாதார நிலையை உயர்த்துவதற்காக ஹேமாஸ் தனியார் மருத்துவமனையுடன் இணைந்து சுகாதார முகாம் நடத்தப்பட்டது.

- வெள்ளி மன்றம்" நிகழ்ச்சி நவம்பர் 2022 முதல் மீண்டும் தொடங்கப்பட்டது இது வழக்கமான கடமைகளிலிருந்து விலகி கலை மற்றும் இலக்கியத்தின் மீது உணர்திறன் மற்றும் பற்றை உருவாக்குவதன் மூலம் அலுவலர்களுக்கு உற்பத்தித் திறன் சேவை சூழலை உருவாக்குகிறது.

  மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக 18.11.2022 அன்று மனநல மருத்துவர் திருமதி.தாருபுத்திகா பரணவிதான அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பணிச்சூழல் மற்றும் மன அழுத்த முகாமை குறித்த உளவள ஆலோசனை அமர்வு நடைபெற்றது. மேலும், திணைக்கள அலுவலர்களின் குரல் திறன்களைக் கூர்மைப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும் “மியேசி செந்தேவா” என்ற இசை நிகழ்ச்சி 16.12.2022 அன்று நடைபெற்றது.



ஆலோசனை திட்டம்



"மியேசி செண்டேவா" இசை நிகழ்ச்சியின் நிகழ்வு

- திணைக்களத்தின் விளையாட்டுக் கழகம், திணைக்களத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுத் திறன் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.







- ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் பெருமளவிலான உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.
- ஓய்வூதியத் திணைக்களத்தின் பணிச்சூழலுக்குத் தயார்படுத்துவதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்பப் பயிற்சித் நிகழ்ச்சி திட்டத்தை நடத்துவதன் மூலம் முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- **பௌதீக நிலைகளை மேம்படுத்துதல்**
  - களனியில் உள்ள விடுமுறை விடுதியின் குளிரூட்டப்பட்ட மாநாட்டு மண்டபத்தை புனரமைத்தல்.

## சவால்கள்

I. **2022** ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் பொதுமானதாக கிடைக்காமையால், டிசம்பர் **31** ஆம் திகதி வரை **15,000** க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களுக்கு **17,000** மில்லியன் ரூபாய்க்கான பணிக்கொடைத் தொகையை செலுத்த முடியவில்லை என்பதுடன் ஓய்வு பெறும் வயது திருத்தத்தின் விளைவாக புதிய ஓய்வூதியர்களின் எண்ணிக்கை **30,000** ஆக அதிகரிக்கப்படும்.

II. விடய அலுவலர்கள் முழுமையற்ற சமர்ப்பிப்புகள், பூரணப்படுத்தப்படாது தவறான முன்னிலைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் முறையாகப் பதிவு செய்யாமை போன்ற காரணங்களால் இயங்கலையில் பெறப்பட்ட சுமார் **35%** புதிய ஓய்வூதிய விண்ணப்பங்களின பதிவுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

III. அரச சேவையில் நிரந்தர நியமனம் பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும் நியமனத்திலிருந்து முதல் **03** மாதங்களுக்குள் விதவைகள் மற்றும் அனாதைகள் திட்டத்தில் கட்டாயமாக பதிவு செய்து அவர்களது அங்கத்தவர் இலக்கத்தைப் பெற வேண்டும். ஆனால், ஓய்வு பெறும் நாளிலும் விதவைகள் மற்றும் அனாதைகள் அங்கத்தவர் இலக்கம் பெறாமையால், ஒரே நேரத்தில் பல விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும போது சிரமங்கள் ஏற்பட்டுள்ளமையால் பதிவுகளுக்கு அதற்கேற்ப முன்னுரிமை அளிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வி அமைச்சுக்கள், பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில் அவ்வாறான பல விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

## ஓய்வூதியத் திணைக்களத்தின் முன்னோக்கிப் பயணம்

2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவு மூலம் மற்றும் 21,2270,315,040 ஆம் இலக்க அமைச்சரவை முடிவு ஆகியவற்றின் படி பொது சேவையிலிருந்து ஓய்வு பெறும் வயது 65 வயது வரை நீட்டிக்கப்பட்டது, அரசியலமைப்பு அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தால் வயது தீர்மானிக்கப்பட்ட அலுவலர்கள் தவிர்ந்த, ஏனைய அரச அலுவலர்களின் கட்டாய ஓய்வு வயது 65 என முடிவு செய்யப்பட்டது. புதிய ஓய்வூதியங்களில் சில குறைப்புக்கள் காணப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் பொதுச் சேவையின் மீது விழும் சுமை குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

இருப்பினும், 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி அதி மேதகு ஜனாதிபதி தனது இடைக்கால வரவு செலவுத்திட்ட உரையில், 30 ஆம் இலக்க 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டமூலம் சமர்பிப்பதற்காக 11.2 ஆம் பிரிவில் பொதுத்துறை சீர்திருத்தங்களின் கீழ் பொதுசேவை மற்றும் அரை பொதுசேவை அலுவலர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 வயதாக குறைக்க முன்மொழிந்தார்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளை நிர்வகிப்பதற்கான தற்காலிகத் தீர்வாக ஓய்வுபெறும் வயதை 65 வயது வரை நீடிக்கப்பட்டுள்ள போதிலும், அரசாங்க ஓய்வூதியத்தில் நீண்டகால முறையான சீர்திருத்த செயல்முறையயொன்றை அறிமுகப்படுத்தாமல் எடுக்கப்படும் இக் குறிப்பிட்ட முடிவு ஓய்வூதியர்களின் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும்.

ஓய்வு பெறும் வயதை மீண்டும் 65 வயதிலிருந்து 60 ஆகக் குறைத்ததன் விளைவாக, 2023 ஆம் ஆண்டில் புதிய ஓய்வூதிய விண்ணப்பப் பதிவுகளில் விரைவான அதிகரிப்பு காணப்படலாம், எனவே, புதிய ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் வழங்குவதில் விரிவாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில், அரசு ஊழியர்களுக்கு மட்டுமின்றி, நாட்டின் வரி செலுத்தும் பொது மக்களுக்கும் நன்மைகளை அளித்து, ஓய்வூதிய முறைகளை முறையாகத் தொடர, 2023 ஆம் ஆண்டில் ஓய்வூதியச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தும் சவாலை சமாளிக்க வேண்டியது அவசியம்.



**ஏ.ஜெகத் டி.டயஸ்**
ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்

# 03
# 2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன்

## 3.1. நிதி செயல்திறன் அறிக்கை

2022.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- F

(ரூபா)

| பாதீடு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| 37,000,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 37,415,664,245 | 34,618,641,924 | ஏசீஏ-1 |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **37,415,664,245** | **34,618,641,924** | |
| | **வருமானம் பெறுகைகள்** | | - | - | |
| | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 302,307,630,000 | 263,440,788,620 | ஏசீஏ-3 |
| | திறைசேரிக்கு மீண்டுவந்த முற்பணங்கள் | | | | |
| | பெற்றுக்கொண்ட தேறிய முற்பணம் | | | | |
| | வைப்புகள் | | 9,643,665 | 17,688,561 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 51,367,788 | 45,150,899 | ஏசீஏ-5 |
| | ஏனைய பெறுகைகள்(8098+8186) | | 77,562,836,883 | 59,506,756,943 | |
| | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **379,931,478,336** | **323,010,385,023** | |
| | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ=(அ)+(ஆ)** | | **417,347,142,581** | **357,629,026,947** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு(ஈ) தேறிய வருமானம் அல்லாத கிடைப்பனவு உ- (இ)-(ஈ)** | | **417,347,142,581** | **357,629,026,947** | |
| | **கழிக்குக : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 709,100,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 659,693,409 | 588,477,116 | ஏசீஏ–2(ii) |
| 82,400,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 74,735,469 | 69,577,060 | ஏசீஏ–2(ii) |
| 359,681,500,000 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 349,319,177,983 | 307,742,273,399 | ஏசீஏ–2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ–2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | | | ஏசீஏ–2(ii) |
| **360,473,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **350,053,606,861** | **308,400,327,575** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 16,200,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 3,462,553 | 7,695,089 | ஏசீஏ-2(ii) |
| 6,500,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 5,216,133 | 7,943,906 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 1,800,000 | திறன் அபிவிருத்தி | 14 | 1,544,314 | 2,318,134 | ஏசீஏ-2(ii) |
| 17,500,000 | பிற மூலதனச் செயவு | 15 | 5,953,783 | 6,353,796 | ஏசீஏ-2(ii) |
| **42,000,000** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **16,176,783** | **24,310,925** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 4,847,290 | 14,435,007 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 49,735,330 | 49,341,260 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | 77,181,532,737 | 59,125,066,992 | |
| | **மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம்** | | 77,236,115,357 | 59,188,843,259 | |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | **427,305,899,001** | **367,613,481,759** | |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான முற்பண மீதி ஏ=(இ-எ)** | | **(9,958,756,420)** | **(9,984,454,812)** | |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின் படிமீதி** | | **(9,958,756,420)** | **(9,984,454,812)** | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணி முற்பணமீதி** | 1 | | | ஏசீஏ-3 |

## 3.2. நிதி நிலை அறிக்கை

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமை அறிக்கை

| | குறிப்பு | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | | 2022 | 2021 |
| | | ரூபா | ரூபா |
| நிதி அல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,030,033,484 | 2,025,555,617 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 171,347,085 | 172,979,543 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 2,201,380,569 | 2,198,535,160 |
| தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 131,753,222 | 138,182,055 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,030,033,484 | 2,025,555,617 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 39,593,863 | 34,797,488 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 2,201,380,569 | 2,198,535,160 |

(அ) 2001 ஜனவரி 15 ஆம் திகதிய 1/2001 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை யின் பந்தி 1(அ) இன் படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செய்யப்பட்ட ரூ.23,009.29 மில்லியன் பங்களிப்பு தொடர்பாக நிறுவனங்களிடமிருந்து கடன் அறிவிப்புகளைப் பெறுவதற்கும் அவ் ஆண்டில் செய்யப்பட்ட ரூ.166.99 மில்லியன் வரவுகளில், செய்யப்பட்ட ரூ.166.79 மில்லியன் வரவுகளைச் சரிபார்க்க அந்தந்த நிறுவனங்களில் இருந்து பற்று அறிவிப்புகளைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கடன் அறிவிப்புகள் கிடைக்காததால், செலவுத் தலைப்பு 159 மற்றும் 336 இன் கீழ் செய்யப்பட்ட மாதாந்த பொறுப்புகளின் மதிப்புகளில் ஏற்படும் மாறுபாட்டிற்கான காரணங்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) மத்திய அரசு மற்றும் வருவாய்க் கணக்குகளின் கீழ் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பிற்கு (விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின் பங்களிப்புகள்) பங்களிப்பு செய்யும் அலுவலர்கள் பற்றிய தரவுத்தளத்தை பராமரிக்க ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுக்காததால், உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டபோது, பங்களிப்பானது முறையாகச் செய்யப்பட்டதா என்பதைச் சரிபார்க்க எந்த முறையும் இல்லை.

#### 2.1.2 வருவாய் குறியீடு – 20:04:02:00 சமூக பாதுகாப்பு பங்களிப்பு (மாகாண சபைகள்)

(அ) மாகாண சபையின் வருவாய் கணக்குகளின் கீழ் சமூக பாதுகாப்பு பங்களிப்புக்காக பங்களிப்பு செய்யும் உத்தியோகத்தர்களின் தரவுத்தளத்தை பேணுவதற்கு ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுக்காததால், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகளின்

பங்களிப்புகளைத் திரும்பப் பெறுதல் போன்ற உரிமைகள் வழங்கப்பட்டபோது உறுப்பினர்களால் பங்களிப்புகள் முறையாகச் செய்யப்பட்டதா என்பதைச் சரிபார்க்க எந்த முறையும் இல்லை.

(ஆ) மாகாண சபைகளின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்து நிறுவனங்களிலிருந்தும் ஒவ்வொரு மாதத்திற்கும் பெறப்படும் பங்களிப்புகள் ஒரே காசோலை மூலம் அனுப்பப்பட்டால், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2021 ஜனவரி 15 ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 2.2 இன் படி, அவ்வாறு மீட்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான காசோலை, அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெறப்பட வேண்டும், எவ்வாறாயினும், அந்த காசோலைகள் 5 மாகாண சபைகளால் 5 முதல் 69 நாட்கள் வரை தாமதமாக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) 2022 ஜனவரி 12 தொடக்கம் 2022 டிசம்பர் 27 வரை, பங்களிப்பை அனுப்பிய 19 நிறுவனங்களின் ரூ.23.75 மில்லியன் மதிப்பிலான 26 காசோலைகள் பல்வேறு காரணங்களுக்காக திருப்பி அனுப்பப்பட்டிருந்தாலும், திருப்பியளிக்கப்பட்ட பங்களிப்புப் பணம் 2023 ஏப்ரல் 1ஆம் திகதி வரை 6 மாதங்கள் கடந்தும் திரும்பப் பெறப்படவில்லை. மதிப்பாய்வின் கீழ் ஆண்டின் வருவாய் நிலுவைத் தொகையாகக் கூட பதியப்படவில்லை.

(ஈ) காசோலை திரும்பப் பெறும் பதிவேட்டின்படி, பல்வேறு காரணங்களுக்காக திரும்பிய காசோலைகளுக்கு புதிய காசோலைகள் பெறப்பட்டபோது அனுப்பப்பட்ட மேலெழுதப்பட்ட காசோலைகளின் 02 சம்பவங்களும், எழுத்துப்பூர்வ காசோலையின் ஒரு சம்பவமும் கண்டறியப்பட்டன.

### 2.1.3 கட்டடங்களது வாடகை

(அ) தற்போது திணைக்கள வளாகத்தில் பராமரிக்கப்படும் 16 நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கட்டிட வாடகை ரூ.34.04 மில்லியன் நிலுவை காணப்பட்டதுடன், அதில் ரூ.1.76 மில்லியன் 12 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.

(இ 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை வங்கி – தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்ட அலகுக்கு முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை மற்றும் வாடகை வசூலிக்கப்படவில்லை.

(ஈ) மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரிவு II, 2021 மே 17 முதல் வாடகைக்கு விடப்பட்டாலும், 2022 ஜனவரி முதல் கட்டிட வாடகை நிலுவைத் தொகை கணக்கிடப்படவில்லை.

## 2.2 செலவுகள் முகாமைத்துவம்

(அ) இரண்டு செலவுப் விடயங்களின் மொத்தம் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவாக இருந்தபோதிலும், அதிலிருந்து எந்தச் செலவும் செய்யப்படவில்லை.

(ஆ) 06 செலவினப் விடயங்களின் தேறிய ஒதுக்கீட்டின் மொத்தத் தொகையான ரூ.37.50 மில்லியனில், மீதம் 68 சதவீதமான ரூ.25.48 மில்லியனாக இருந்த்தது. இத்தொகை, செலவினப் விடயங்களின் தேறிய ஒதுக்கீட்டில் 40 முதல் 82 சதவீதம் வரை விரிவடைகிறது.

(அ) ஓய்வூதியப் பலன்களுக்காகப் பெறப்பட்ட ஒதுக்கீடுகளில் ரூ.717,275 எரிபொருள், காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் போன்ற பொதுச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றிதழ்

2018ஆம் ஆண்டின் ஆம் இலக்க தேசிய 19 கணக்காய்வுச் சட்டத்தின் (இ) (1) 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் கணக்கியல் அலுவலர் பின்வரும் விஷயங்களைச் சான்றளிக்க வேண்டும். இருப்பினும், அது அவ்வாறு செய்யப்படவில்லை.

(அ) திணைக்களத்தில் நிதிக் கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு இருப்பதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்து, அத்தகைய அமைப்புகளின் செயல்திறனைக் கண்காணிக்க அவ்வப்போது மதிப்பாய்வுகளை மேற்கொள்வார். எழுத்துப்பூர்வமாக மேற்கொள்ளப்பட வேண்டும், அதன் நகல் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக கணக்காய்வுக்கான எந்த அறிக்கையும் அளிக்கப்படவில்லை.

(ஆ) தலைமை கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர், கணக்காய்வாளர் நாயகத்தின் தேவைக்கேற்ப உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலளிப்பதாக உறுதியளித்தாலும், அறிக்கையின் பந்தி .3.4 இன் படி அனைத்து கணக்காய்வு ஐயவினாகளுக்கும் பதிலளிக்கப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்காதவை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் குறிப்பு | பெறுமதி ரூ. | இணக்கம் இல்லாதவை |
|---|---|---|
| 2011 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 1719/3 ஆம் இலக்க வர்த்தமானி. | | (அ) பிறவியில் ஊனமடையாதவர்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ சபைக்கு அனுப்பப்பட வேண்டும் என்றாலும், இந்த நடைமுறையை, களனி பிரதேச செயலகம் 05 சம்பவங்களில் பின்பற்றவில்லை அதே சமயம் பததும்பர பிரதேச செயலகம் அனைத்து ஊனமுற்ற கோவைகளுக்கும் பின்பற்றப்படவில்லை. |
| | 97,722 | (ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 2வது பிரிவின் படி, 2019 ஆகஸ்ட் 19 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில், பிறப்பால் ஊனமடையாத நபர்கள், மருத்துவ சபையால் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஊனமுற்ற ஓய்வூதியத்தைப் பெறத் தகுதியுடையவர்கள். பாததும்பர பிரதேச செயலகத்தால் 2004-2005 காலப்பகுதிக்கான மாற்றுத்திறனாளி அனாதைகளுக்கான ஓய்வூதிய நிலுவையை செலுத்தப்பட்டுள்ளது. |
| 26 ஏப்ரல் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவசெலவு திட்ட சுற்றறிக்கையின் பந்தி.5 | 902,725 | தேவையற்ற செலவுகள், பொது நிறுவனங்களால் நடத்தப்படும் செயல்பாடுகள், திறப்பு விழாக்கள் மற்றும் பிற தேவையற்ற மற்றும் முன்னுரிமை இல்லாத நிகழ்வுகள் என கருதப்படும் செலவுகள் இடைநிறுத்தப்பட |

| | | |
|---|---|---|
| மற்றும் 3(xvi) | | வேண்டும் என்றாலும், தேசிய ஓய்வூதியர் தினமான 2022க்காக செலவுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 2022 ஜூன் 22 திகதிய 14/2022 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை, 14/2022(I) ஆம் இலக்க 2022 செப்டம்பர் 20 ஆம் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கை. | 4,491,427 | உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறையைப் பெறுவதற்கான முறையான பதிவு முறையைப் பின்பற்றாததன் விளைவாக, விதவைகள்/விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறையைப் பெறுவதற்கான முறையான பதிவு முறையைப் பின்பற்றாததன் விளைவாக, விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சுற்றறிக்கையின்படி மாதந்தோறும் பங்களிப்புச் செய்து ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிய அந்தந்த அதிகாரியைக் கண்டறிவது கடினமாக உள்ளது. (2022 நவம்பர் முதல் 2023 பிப்ரவரி வரை) பங்களிப்புகள் அடையாளம் தெரியாத பற்றுச் சீட்டுகள் பொது வைப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. |
| 2006 டிசம்பர் 15 ஆம் திகதிய 19/2006 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | கிராம உத்தியோகத்தருக்கான ஓய்வூதியம் தொடர்பான பொறுப்பை வழங்கியதன் பின்னர், கிராம உத்தியோகத்தரிடம் பராமரிக்கும் ஓய்வூதியர்களின் பட்டியல் பிரதேச செயலகத்தில் பராமரிக்கப்படும் ஓய்வூதியம் பெறுவோர்/பதிவு பொதுவான கோவையுடன் இற்றைப் படுத்தப்படவில்லை என்பதுடன் கிராம உத்தியோகத்தர் மூலம் தகவல் சேகரிக்கும் ஆவணம் மற்றும் ஓய்வூதியர்களின் தகவல் ஆவணம் இற்றைப் படுத்தப்படவில்லை . |
| 2022 ஜனவரி 20 ஆம் திகதிய 1/2022 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை<br>i. பந்தி .2(i) | 1,440,675 | ஒருவர் பல ஓய்வூதியங்களைப் பெறுகின்ற போது, அவர் மாதாந்தம் ஒரு விசேட கொடுப்பனவை மாத்திரமே பெறுவதற்குத் தகுதியுடையவர் எனினும், ரிதீகம, பியகம, தொம்பே, கம்பஹா பிரதேச செயலகங்களில் பல ஓய்வூதியங்களுக்காக தனித்தனியாக விசேட கொடுப்பனவுகள் அதிகமாகச் செலுத்தப்பட்ட 30 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. தரவுத் தளத்திற்கமைய. |
| ii. பந்தி 2(iii) | 445,000 | 55 வயது வரை சேவை ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு அல்லது 55 வயது வரை ஊதியம் பெறும் சார்புடையவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டாலும், பயங்கரவாத |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கைகளின் விளைவாக பொலிஸ் சேவைகள் மற்றும் முப்படையில் பணியாற்றிய போது இறந்த நபர்களுக்கு கம்பஹா பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது மற்றும் தரவுத்தளத்தின் ஊடாக 10 ஓய்வூதியர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. |
| iii. பந்தி 2(iv) | 100,000 | வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுவோர் 5,000 ரூபா கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றாலும், வெளிநாட்டில் வசிக்கும் 02 ஓய்வூதியர்களுக்கு கம்பஹா மற்றும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகங்களில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |
| 2016 ஏப்ரல் 27 ஆம் திகதிய 03/2016 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை<br>i. பந்தி .3 | | வத்தளை பிரதேச செயலகத்தில் 2016 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற 14 ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய முரண்பாடுகள் செய்ப்படாமல் இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |
| ii. பந்தி .7 | 764,719 | 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு கிடைக்காத போதிலும், வத்தளை, பாததும்பர, குண்டசாலை, ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகங்களில் 64 ஓய்வூதியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |
| 2018 ஜூன் 20 ஆம் திகதிய 01/2018 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை<br>i. பந்தி .5(iii) | | இரண்டு வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோர் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவின் ஊடாக ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 05 ஓய்வூதியர்களின் ஓய்வூதியக் கோப்புகள் கம்பஹா பிரதேச செயலகத்தினால் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவுக்கு மாற்றப்படவில்லை. |
| ii. பந்தி.06(ஆ) | 135,300 | வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 2,000 என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 03 வெளிநாட்டு ஓய்வூதியர்களுக்கு 3,525 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக கம்பஹா மற்றும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகங்கள் மூலம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| iii. பந்தி.7(ii) மற்றும் 9 | | (அ) வெளிநாட்டுத் தூதரகங்களால் சான்றளிக்கப்பட்ட உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டும் என்றாலும், கிராம உத்தியோகத்தரால் சான்றளிக்கப்பட்ட உயிர் வாழ்ச் சான்றிதழின் அடிப்படையில் மூன்று ஓய்வூதியதாரர்களுக்கு ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகம் ஓய்வூதியம் வழங்கியுள்ளது. |
| | | (அ) வெளிநாட்டு உயிர் வாழ்ச் சான்றிதழைச் சான்றளிக்கும் அதிகாரம் கொண்ட அதிகாரிகள் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர், இருப்பினும், ஒரு ஓய்வூதியதாரர் 2010, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுக்கான “SM MEDICAL CENTER” என்ற நிறுவனத்தின் குடும்ப மருத்துவர் மூலம் உயிர் வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பித்துள்ளார். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓய்வூதியம் செலுத்தப்படாத காலங்களுக்கான கொடுப்பனவுகளுடன் செயல்படுத்தப்பட்டது. |
| 2018 ஜுலை17 ஆம் திகதிய 9/2018 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | ஆயுதப்படை ஓய்வூதியம் (59) மற்றும் ஊனமுற்றோர் ஓய்வூதியம் (6) ஆகியவற்றை ஒருங்கிணைத்து கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும் என்றாலும், களனி, நாரம்மல, மஹரகம, பண்டுவஸ்நுவர (மேற்கு), பியகம, திம்பிரிகஸ்யாய ஆகிய பிரதேச செயலகம், 33 ஓய்வூதியர்களுக்கு இந்த நடைமுறையை பின்பற்றவில்லை. 03 ஓய்வூதியர்கள் தரவுத்தளத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். |
| 2017 ஏப்ரல் 07 ஆம் திகதிய 1/2011 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | ஓய்வூதிய கொடுப்பனவு முறையை முறைப்படுத்துவதற்கு, ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான மாதாந்த செலவு, சேர்க்கப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் திருத்தங்கள் அடங்கிய அறிக்கையை மாதாந்தம் தயாரித்து கட்டுப்பாட்டு கணக்குடன் ஒப்பிட வேண்டும், இருப்பினும், ரிதீகம, குளியாப்பிட்டிய கிழக்கு , களனி, நாரம்மல, பியகம ஆகிய பிரதேச செயலகங்கள் அதை பின்பற்றவில்லை. |
| ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2017 பெப்ரவரி 09 ஆம் திகதிய 1/2017 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் | 161,750 | இலக்கம் 04-19454ஐக் கொண்ட ஓய்வூதியம் பெறுபவர் மற்றும் அவரது கணவருக்கு குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகத்தினால் தங்கி வாழ்வோர் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. 2014 |

| | | |
|---|---|---|
| 01/2017(I) ஆம் இல. 2017 பெப்ரவரி 09 ஆம் திகதிய ஓய்வூதிய அறிவுறுத்தல்க் கடிதம் | | ஆகஸ்ட் 26 அன்று அவரது கணவர் இறந்த பிறகு, விதவைக்கு முழு தங்கி வாழ்வோர் உதவித்தொகையின் வழங்கப்பட வேண்டியிருந்தாலும், செப்டம்பர் 2014 முதல் டிசம்பர் 2022 வரையிலான காலகட்டத்தில் முழு சார்பு உதவித்தொகையில் 50 சதவீதம் குறைந்த கட்டணமாக வழங்கப்பட்டது. |
| 2009 ஜெனவரி 07 ஆம் திகதிய 1/2009 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தி | | வயோதிபத்தினால் ஏற்படும் நோய்களின் அடிப்படையில் பணம் செலுத்த முடியாது, எனினும், பததும்பர பிரதேச செயலகம், 62 மற்றும் 58 வயதுடைய இரு ஓய்வூதியர்களுக்கு மருத்துவ சபைக்கு முன் ஆஜர்படுத்தி ஊனமுற்ற ஓய்வூதியத்தை வழங்கப்பட்டுள்ளது. |
| 2020 டிசெம்பர் 2 ஆம் திகதிய 1/2009 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை<br>i. பந்தி . 02 | | அனாதையின் 26 வயதுக்கு முன்னர் இயலாமை ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும், நாரம்மலை பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோர் இருவருக்கு 58 மற்றும் 49 வயதில் ஊனம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| ii. பந்தி .09 | | பிறப்பால் ஊனமில்லாத குழந்தைகளுக்கு 5 ஆண்டுகள் ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் என்பதால், அத்தகைய குழந்தைகளை ஐந்தாண்டுக்கு ஒருமுறை மருத்துவக் குழுவுக்கு அவர்களின் குறைபாடுகள் குறித்து தெரிவிக்க வேண்டும். எவ்வாறாயினும், பத்ததும்பர பிரதேச செயலகம் ஊனமுற்ற எந்தவொரு கோப்புக்கும் இந்த நடைமுறையை பின்பற்றவில்லை. |
| 2019 மே 30 ஆம் திகதிய 2/2019 இலக்க பொ.நி.சு | | பதிவாளர் ஜெனரல் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குமுறை கையேட்டின்படி, அரசாங்க ஓய்வூதியம் பெற்ற ஒருவரின் இறப்பு பதிவு, படிவம் B73 மூலம் மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட பதிவாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இதன் பிரதிகளை வாரத்திற்கு ஒருமுறை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் பதிவாளர்களுக்கு அறிவித்தாலும், பண்டுவஸ்நுவர (கிழக்கு), குளியாப்பிட்டிய (கிழக்கு), தெஹிவளை, மஹரகம, ஹோமாகம ஆகிய பிரதேச செயலாளர்கள் அது தொடர்பில் தெரிவிக்கவில்லை. |
| 2019 ஜூன் 11 ஆம் திகதிய 1/2019 இலக்க | | (அ) பட்ஜெட் முன்மொழிவுகள் 2019 இன் படி, ஜனவரி 1, 2017 க்கு முன் ஓய்வு பெற்ற அரசு |

| | | |
|---|---|---|
| ஓய்வூதிய சுற்றறிக்கை | | அலுவலர்களின் ஓய்வூதியம், பொது நிர்வாக சுற்றறிக்கை இல.3/2016 இன் படி, 2019 ஜூலை 1 முதல் மாற்றியமைக்கப்பட வேண்டும், இருப்பினும், மாதிரிகளை விசாரித்தபோது, அது தெரியவந்தது. களனி, கம்பஹா, பண்டுவஸ்நுவர (கிழக்கு), பண்டுவஸ்நுவர (மேற்கு), ரிதீகம, நாத்தாண்டிய, பாததும்பர, நாரம்மல, ஹாரிஸ்பத்துவ மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள 231 ஓய்வூதியர்களுக்கு இந்த திருத்தம் செய்யப்படவில்லை. |
| | 659,682 | (அ) ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறும் விதவைகள் மற்றும் இழப்பீட்டுச் சம்பளம் பெறும் ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதிய மாற்றங்களுக்காக கருதப்படக்கூடாது, எனினும் 21-650001 மற்றும் 57-335 (757801094V) என்ற இலக்கத்தின் கீழ் பததும்பர பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும்போது ஓய்வூதியம் பெறுபவரின் ஓய்வூதியத்தை திருத்தம் செய்ததன் விளைவாக ஓய்வூதியம் அதிகமாக செலுத்தியமையால் அதிக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| 2010 நொவெம்பர் 07 ஆம் திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2014 ஜனவரி 10 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 22,992,945 | (அ) அரச உத்தியோகத்தர், 44 ஓய்வூதியர்கள், 82 உயிரிழந்த கடற்படை உத்தியோகத்தர்கள் என மொத்தம் 129 ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவான 7,800 ரூபாவிற்கும் அதிகமான வாழ்வாதார கொடுப்பனவை வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்ட போதிலும், நாரம்மல, பண்டுவஸ்நுவர (மேற்கு), பியகம, தொம்பே, திம்பிரிகஸ்யாய, ரிதீகம, கம்பஹா மற்றும் களனி ஆகிய பிரதேச செயலகங்களில் இந்த வரம்பிற்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. |
| | 7,120,689 | (அ) ஓய்வூதியர்களால் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூ.7,800 வரை பெற அனுமதிக்கப்பட்டாலும், 43 ஓய்வூதியர்களுக்கு குறைந்த அளவு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2015 ஜூலை 15 ஆம் திகதிய 6/2015 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | | கடமையின் போது இறந்த அலுவலர்களின் வாரிசுகளுக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்குவது சரியானதா இல்லையா என சரிபார்க்கப்படவில்லை, ஏனெனில் மரணச் சான்றிதழின் மூலப்பிரதி, விருது தாள் மற்றும் உரிமைக்கான ஏனைய முக்கிய ஆவணங்கள் இல்லாமல் 21-103904 என்ற ஓய்வூதிய இலக்கத்தின் கீழ் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய செலுத்தப்பட்டது. |
| 2014 பெப்ரவரி 20 ஆம் திகதிய 2/2014 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 557,607 | பயங்கரவாதச் செயல்களால் இறந்த அல்லது காணாமல் போன காவல்துறை அதிகாரிகளின் வாரிசுகளுக்கு தங்கி வாழ்வோர் உதவித்தொகை வழங்க ஆரம்பிக்கும் பொது, இழப்பீட்டு ஓய்வூதியம் வழங்கப்படுவது நிறுத்த வேண்டும், மேலும் தங்கி வாழ்வோர் கொடுப்பனவு, இழப்பீட்டு ஓய்வூதியம், இடைக்கால கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ஆகியவற்றின் அதிகப்படியான தொகையை வசூலிக்க வேண்டும். எனினும் இது பிரதேச செயலக ரிதீகமவால் பின்பற்றப்படவில்லை. |
| 2014 நொவம்பர் 03 ஆம் திகதிய 13/2014 இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை<br><br>. | 150,500 | பல ஓய்வூதியங்கள் வழங்கப்படும் போது, மாதாந்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு தொகையானது ஒருங்கிணைந்த ஓய்வூதியம் முழுவதுக்குமாக வழங்கப்பட வேண்டும். எனினும், பிரதேச செயலகம், குளியாப்பிட்டி (கிழக்கு) இதனைப் பின்பற்றாமல் 2014 செப்டெம்பர் முதல் 2022 டிசம்பர் வரை ஓய்வூதிய இலக்கம் 40-3011 இற்கு ரூ.4,750 வும் மற்றும் 4-21321 எனும் ஓய்வூதிய இலக்கத்திற்கு ரூ.1,750 வும் அதிகப்படியாக செலுத்தப்பட்டுள்ளதுது. |
| 2014 ஒக்ரோபர் 16 ஆம் திகதிய 4 ஆம் இலக்க ஓய்வூதிய அறிவுறுத்தல்க் கடிதத்தின் (iv) ஆம் பந்தி | | மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டு 03 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், குறித்த பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியக் கோவை பெறப்பட வேண்டும், பத்ததும்பர, குண்டஸ்லே, களனி, நாரம்மல, பியகம ஆகிய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு 04 முதல் 02 வருடங்கள் கடந்தும் 27 ஓய்வூதியக் கோவைகள் கிடைக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2020 பெப்ரவரி 15 ஆம் திகதிய 03/2020 ஆம் இல. ஓய்வூதிய சுற்றறிக்கை | | அனாதைக்கு 18 வயது நிறைவடைந்தவுடன், பாதுகாவலரை நீக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பஹா பிரதேச செயலகமானது கணக்காய்வின் போது 18 வயது நிறைவடைந்த நிலையிலும், பாதுகாவலரின் கீழ் உரிமை உள்ள அனாதைக்கு ஓய்வூதியம் செலுத்தி வருவது தெரியவந்துள்ளது. |
| 2010 டிசம்பர் 16 ஆம் திகதிய 13/2010 ஆம் இல. மற்றும் 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதிய 03/2013 ஆம் இல. ஓய்வூதிய சுற்றறிக்கை | 1,892,716 | மறுமணம் செய்துகொண்ட விதவைகளுக்கு 50 சதவீத விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் மட்டுமே வழங்கப்பட வேண்டும், எனினும், தொம்பே, கம்பஹா மற்றும் நாரம்மலை பிரதேச செயலகங்களில் 4 ஓய்வூதியர்களுக்கு அதிகக் கொடுப்பனவு எனத் தெரியவந்துள்ள நிலையிலும் முழு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. |
| 2022 நொவம்பர் 03 ஆம் திகதிய 07/2022 ஆம் இல. ஓய்வூதிய சுற்றறிக்கை | | முதல் ஓய்வூதியம் பெறுவதற்கு முன்பே இறந்த ஓய்வூதியரின் மரணப்பணிக் கொடை தொகை, அவர் இறந்த திகதியிலிருந்து ஜனவரி 2023 வரை 2 ஆண்டுகள் மற்றும் 7 மாதங்களுக்குப் பிறகும் அவரது வாரிசுகளுக்கு வழங்கப்படவில்லை |

### 2.5 முன்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்வு செய்தல்

31 டிசம்பர் 2022 இல் 25301 எனும் விடய இலக்கத்தின் கீழ் மீளப்பெற வேண்டிய தனிநபர் நிலுவைகளின் மொத்தத் தொகை ரூ.171,347,084 ஆகும், இது ஓய்வுபெற்ற 05 அலுவலர்களிடமிருந்து பெற வேண்டிய ரூ.481,873 கடன் நிலுவைகளையும் மீதியான ரூ.142,920 பதவி வெறிதாக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவைகளையும் உள்ளடங்கியுள்ளது. 1-2 வருட காலப்பகுதிக்குள் வேறொரு அலுவலரிடமிருந்து மீட்கப்பட வேண்டிய கடன் மீதி ரூ.239,812 ஆக காணப்பட்டது. 06 அலுவலரிடமிருந்து 05 வருடங்களுக்கும் மேலாக மீட்கப்பட வேண்டிய கடன் மீதி ரூ.692,794 ஆக இருந்தது.

### 2.6 வைப்புகள்

ஓய்வூதியர் தினத்திற்காக பெறப்பட்ட ரூ.4,413,050 வைப்புத்தொகை, நிதி பிரமாணம் 571(3) இன் படி பயன்படுத்தாமல் அல்லது அரசாங்க வருவாயாக பயன்படுத்தாமல் பொது வைப்பு கணக்கில் 02 ஆண்டுகளுக்கும் மேலாக வைப்பிலிடப்ப்ப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது.

### 2.7 வங்கி கணக்கு செயல்பாடுகள்

(அ) 2022 டிசம்பர் 31 இன் வங்கி கணக்கிணக்க கூற்றின்படி, 243 காசோலைகளில் ரூ.33,518,799 அடையாளம் காணப்படாத சிட்டைகள் அடையாளம் கண்டு தீர்வு காணப்படவில்லை..

(அ) கணக்காய்வின் போது, உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான இலங்கை வங்கியின் 7041643 ஆம் இலக்க வங்கிக் கணக்குகள் மற்றும் உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்களுக்கான இலங்கை வங்கியில் 7041644 ஆம் இலக்க வங்கிக் கணக்குகள் செயலற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.8 இடைக்கால கட்டநிதி வழங்குதல் மற்றும் தீர்வு செய்தல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதி ஒழுங்கு விதி 371(2)(அ) இன் படி, இடைக்காலத் கட்டுநிதியைப் பெறும் பதவிநிலை அலுவலர் சம்பந்தப்பட்ட பணி முடிந்தவுடன் அதைத் தீர்க்க வேண்டுமெனினும், 15 நிகழ்வுகளில் 8 அலுவலரகளால் பெறப்பட்ட ரூ.897,824 இடைக்காலத் கட்டுநிதியானது 15 முதல் 43 நாட்களின் பின் தீர்க்கப்பட்டது. மேலும், இரண்டு அலுவலரகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதற்கு முன்பாகவே மொத்தமாக ரூ.496,091 முற்பணமாக வழங்கப்பட்டுள்ளமை 10 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) களனி வெதமுல்ல விடுமுறை விடுதிக்கான மேசைப் பாத்திரங்களை கொள்வனவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் பொருட்களை வாங்குவதற்கு 371(4) ஆம் இலக்க நிதி ஒழுங்கு விதிமுறைகள் பின்பற்றப்பட்டு, 2022 டிசம்பர் 27 ஆம் திகதி 12/233 ஆம் இலக்க வவுச்சர் மூலம் ரூ.100,000 மற்றும் 12/232 ஆம் இலக்க வவுச்சர் மூலம் மேலும் ரூ.100,000 வழங்கப்பட்டுள்ளது.

(இ) இடைக்காலத் கட்டு நிதியாக வழங்கப்பட்ட தொகையையும் ஏற்பட்ட செலவினங்களையும் ஒப்பிடுகையில், செய்யப்பட்ட செலவில் 9 சம்பவங்களில் 50 முதல் 88 சதவீதம் அதிக மதிப்பீடுகள் அவதானிக்கப்பட்டன.

## 3 செயல்பாட்டு ஆய்வு

### 3.1 செயல்திறன்

#### 3.1.1 திட்டமிடல்

(அ) புதுப்பிக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு, ஆண்டு செயற்திட்டத்திற்கான கட்டுநிதி தேவைத் திட்டம், திட்டமிடப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்காக தயாரிக்கப்பட்ட வருடாந்திர கொள்முதல் திட்டம் ஆகியவை 2020 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி நிறுவனத்தின் வருடாந்த செயல் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

(ஆ) 02/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை வழிகாட்டுதலின் 12 ஆம் இலக்கத்தின்படி மனிதவள முகாமைத்துவ திட்டம், அமைப்பு அபிவிருத்தி, வன்பொருள் வசதி அபிவிருத்தி, மூலதனச் சொத்துகளைப் பெறுதல் தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் செயல்பாடுகளின் வெளியீடுகள் தெளிவாக அடையாளம் காணப்படவில்லை. .

#### 3.1.2 பங்காளர்களின் செயல்திறன் இல்லாமை

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.500,000 ஒதுக்கப்பட்ட போதிலும், அதற்கான செயல்பாடுகள் செயல்படுத்தப்படாததால், தரவுத்தளத்தை மேம்படுத்தும் செயல்முறையும் செய்யப்படவில்லை.

### 3.2 கொள்முதல்

2022 மே17 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் தரவுத்தளம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்பைப் பாதுகாப்பதற்கான இலங்கை CERT உடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தத்தின்படி செயல்பாட்டின் தொடக்கத்தில் மொத்த செலவினத்தில் 50 வீதத்தை ஆரம்பத்திலேயே செலுத்தியிருக்க வேண்டும். 2022 மே 17 ஆம் திகதி தொடங்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக 2022 மார்ச் 31 ஆம் திகதி அன்று மொத்தச் செலவு ரூ.1,660,550 செலுத்தப்பட்டது.

### 3.3 இழப்புகள் மற்றும் சேதங்கள்

(அ) மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, வருட இறுதியில் மீளப்பெறப்படாத ஓய்வூதிய மேலதிக கொடுப்பனவுகளின் பெறுமதி ரூ.785 மில்லியன் ஆகும். இந்தத் தொகையில், 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருக்கும் ரூ.301,522 தொகை, 5 தொடக்கம் 10 ஆண்டுகளில் நிலுவையில் இருக்கும் மீளப்பெறாத ரூ.47 மில்லியன் தொகை மற்றும் 5 ஆண்டுகளுக்குள் நிலுவையில் இருக்கும் ரூ.738மில்லியன் தொகை ஆகியவை அடங்கும்.

(ஆ) அந்தந்த மாவட்ட செயலகத்தால் அனுப்பப்பட்ட மதிப்பாய்வின் கீழ் ஆண்டுக்கான இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்த அறிக்கைகளின் இறுதி நிலுவை ஓய்வூதியத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பாய்வின் ஆண்டின் இறுதி நிலுவைத் தொகையுடன் ஒப்பிடப்படவில்லை.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளிக்காமை

2022 டிசம்பர் 31 அன்று வழங்கப்பட்ட 43 ஐயவினாக்களில் 21 கணக்காய்வு வினாக்களுக்கு 2023 மார்ச் 31 வரை பதிலளிக்கப்படவில்லை.

### 3.5 முகாமைத்துவத்தின் பலவீனங்கள்

3.5.1 குண்டசாலை, கம்பஹா, பததும்பர, நாத்தாண்டிய, குளியாப்பிட்டிய (கிழக்கு), களனி, திம்பிரிகஸ்யாய, நாரம்மல, ஹாரிஸ்பத்துவ, பியகம மற்றும் ரிதீகம ஆகிய பிரதேச செயலகங்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு கோப்புகள் மீதான விசாரணையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்குவதற்கு முன்னரே மருத்துவ சபைக்கு அனுப்பி, ஊனமுற்றோர் தொடர்பான மருத்துவ நிலையைச் சரிபார்க்க வேண்டும் என்ற போதிலும், முறையான சான்றொப்பம் இன்றி ஓய்வூதியம் வழங்கிய 8 சம்பவங்கள் 4 பிரதேச செயலகங்களில் இனங்காணப்பட்டுள்ளன.

(ஆ) குண்டசாலை பிரதேச செயலகத்தின் மத்திய தரவுத்தளத்தின் அடிப்படையில் 09 கோவைகள் வெளிநாட்டு ஓய்வூதியம் (வெளிநாட்டு Trf.) என பெயரிடப்பட்டுள்ளன, எனினும் பிரதேச செயலகத்திற்கு ஓய்வூதியம் பெறுவோர் உயிர்வாழ்ச் சான்றிதழ்களை சமர்ப்பிக்காதது மற்றும் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது குறித்து கிராம அலுவலர் மூலம் அறிவிக்கப்பட்ட பின்னரும் அந்த ஓய்வூதியத்தை இடைநிறுத்துவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) 2018 பெப்ரவரி 07 ஆம் திகதியன்று KDS/KUN/KUN/02/08 என்ற கடிதத்தின் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 1-725735 இலக்கம் கொண்ட ஓய்வூதியக் கோவை கணக்காய்வு திகதியான 2020 டிசம்பர் 13 ஆம் திகதி வரை குண்டசாலை பிரதேச செயலகத்திற்கு திருப்பி அனுப்பப்படவில்லை.

(ஈ) கம்பஹா பிரதேச செயலகத்தினால் ஓய்வூதிய இலக்கம் 41-451915 இன் கீழ் அனாதைக்கு (956361117v) வழங்கப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகள் 2021 மே 14 ஆம் திகதியுடன் அனாதையின் 26 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஜூன் 2021 வரை கொடுப்பனவு தொடரப்பட்டுள்ளது. அதன்படி, கூடுதலாகச் செலுத்தப்பட்ட ரூ.25,925 தொகையை திரும்பப் பெறாமல், மறுமணம் செய்து கொண்ட இந்த அனாதையின் தாய்க்கு ஜூன் 2021 முதல் ஓய்வூதியத்தில் 50 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) கம்பஹா பிரதேச செயலகத்தினால் 04 ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் உரிய அனாதைகள் 21 வயதை பூர்த்தி செய்ததன் பின்னர், பெற வேண்டிய அனாதை 5/1, அனாதை 6 மற்றும் அனாதை 8 எனும் முறையான பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைப் பெறாமல் வழங்கப்பட்டுள்ளன.

(ஊ) பல்வேறு காரணங்களால் ஓய்வூதிய கொடுப்பனவுகள் / திருத்தங்கள் இடைநிறுத்தப்பட்ட சமயங்களில், அதிக கொடுப்பனவாக ரூ.489,055 அதிகமாக தொடர்ந்து செலுத்திய 10 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

(எ) தகுதியற்ற நபர்களுக்கு ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்கிய 03 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஏ) ஓய்வூதியம் இலக்கம் 21-49375ஐக் கொண்ட ஓய்வூதியர் இறுதியாக 2017 ஆம் ஆண்டுக்கான உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பித்துள்ள போதிலும், பததும்பர பிரதேச செயலகம், 2018 மே 10 ஆம் திகதி வரையான 02 மாதங்களுக்கு ரூபா 38,810 மேலதிக கொடுப்பனவுடன் ஓய்வூதியருக்கான கொடுப்பனவுகளைச் செய்துள்ளது. கணக்காய்வுத் திகதியில் உள்ள கோவைகளைக் குறிப்பிடுகையில், ஓய்வூதியம் பெறுபவரின் மரணம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே, சான்றிதழ் புதுப்பிக்கப்படாததால், உண்மையான அதிகப்படியான கட்டணத்தை அடையாளம் காண்பது கடினமாக உள்ளது.

(ஐ) பததும்பர பிரதேச செயலகத்தில், ஓய்வூதிய இலக்கங்கள் 21-1251535, 21-202514 மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம்.558612258V ஆகியவற்றைக் கொண்ட ஓய்வூதியரின் விதவைகளுக்கான ஓய்வூதியம், 1984 நவம்பர் 5ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்படவுள்ளது. தனது முந்தைய திருமணம் குறித்து தெரிவிக்காமல், இரண்டாவது திருமண சான்றிதழில் திருமணமாகாதவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முதல் திருமணத்தின் கணவரின் விவரங்கள் விதவைகள் மற்றும் சிவில் கோவைகள் இரண்டிலும் இல்லை. முதல் திருமணத்தின் குழந்தையின் பிறப்புச் சான்றிதழில் முதல் திருமணத்தின் கணவர் பெயர் உள்ளிடப்பட்டிருந்தாலும், முதல் திருமணத்தின் முடிவு குறித்து எந்த தகவலும் இல்லை. அதன்படி, முதல் திருமணம் முடிந்ததை நிரூபிக்காமல் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஒ) பததும்பர பிரதேச செயலகத்தில் 01-1107670 எனும் ஓய்வூதிய இலக்கமதைக் கொண்ட ஓய்வூதியர் 2019 ஒக்டோபர் 19 ஆம் திகதி நிர்வாக மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பின் மூலம் 2013 ஜனவரி 11 ஆம் திகதியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார், எனினும், 2013 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி வரை ஓய்வூதியருக்கு ரூ.136,155 செலுத்தப்பட்டது, அதைத் திரும்பப் பெறுமாறு 16 நவம்பர் 2019 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட பின்னரும் சம்பளத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், சேவையில் இருந்து நீக்கப்பட்டதால் ஓய்வூதியம் பெற தகுதியில்லாத ஒருவருக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.560,339 மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.187,434 ஆகியவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஓ) ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் ஓய்வூதியக் கோவை பராமரிக்கப்பட வேண்டும் எனினும், களனி பிரதேச செயலகம் 07 ஓய்வூதியர்களுக்கும், நாத்தாண்டி பிரதேச செயலகம் ஓய்வூதியர் ஒருவருக்கும் ஓய்வூதியக் கோவைகளை பராமரிக்காமல் ஓய்வூதியம் வழங்கியுள்ளது.

(ஔ) 18 வயது நிறைவடைந்தவுடன் வங்கிப் புத்தகத்தை உடயவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றாலும், நாரம்மல மற்றும் பியகம பிரதேச செயலகங்கள் உரிய வயதை பூர்த்தி செய்த 05 சிறார்களுக்கான வங்கிப் புத்தகங்கள் வழங்கவில்லை.

(ஃ) ஹரிஸ்பட்டுவ பிரதேச செயலகத்தில் 21-204986 இலக்கத்தைக் கொண்ட ஓய்வூதியம் பெறுபவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார், எனினும் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 8.2 இன் I மற்றும் II படி ஓய்வூதிய விண்ணப்பத்துடன் வரலாற்றுத் தாள் மற்றும் F.R.1729 அறிக்கையின் நகல் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை ஓய்வூதியங்கள் 2020 கையேட்டின் பந்தி .4.5.3 இன் படி, 1981 ஆம் ஆண்டு ஜூலை 02 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு அலுவலரின் பதவி வெறிதாக்கலைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில், சம்பளம் ரூபாயின் அதன் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும் மற்றும் ஓய்வூதியம் இருக்க அடிப்படையயிலேயே கணிக்க வேண்டும். எனினும் இந்த நடைமுறைக்கு மாறாக ஓய்வூதியம் கணக்கிடப்பட்டுள்ளது.

(க) ஹரிஸ்பட்டுவ பிரதேச செயலகத்திலுள்ள.21-300870 ஓய்வூதிய இலக்கத்தைக் கொண்ட ஓய்வூதியருக்கு, வரலாற்றுத் தாள் மற்றும் படிவம் 12 இன் படி முழு சேவைக்காலம் தினசரி ஊதியம் மற்றும் ஓய்வூதியமற்ற சேவைக் காலம் ஆகிய இரண்டு சேவைக் காலங்களையும் தவிர்த்து கருத்தில் கொண்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அங்கு ஓய்வூதிய கோவையில் ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆவணம் இல்லை மற்றும் 6/2006 மற்றும் 14/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் படி ஓய்வூதிய திருத்தத்திற்கான அடிப்படை சம்பளம் சரியானதா இல்லையா என்பது நிரூபிக்கப்படவில்லை.

(கா) 10 ஜனவரி 2014 திகதியிட்ட 1/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின்படி, ஒரு அரச ஊழியராக ரூ.7,800 வரையிலான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை சமமாகப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டாலும், இரண்டு ஓய்வூதியத்திற்கும் இரண்டு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளை செலுத்துதல் அத்துடன் ஊனமுற்றோருக்கான ஓய்வூதிய உரிமைக்காக ஓய்வூதிய உரிமைக்கான ஒற்றை ஆதாரத்திற்காக வழங்கப்பட்ட கொடுப்பனவு கணக்காயவின் படி சர்ச்சைக்குரியதாக காணப்படுகிறது. எனவே, ரிதீகம பிரதேச செயலகத்தில் மூன்று ஓய்வூதியர்களுக்கு ரூபா 1,415,695 மேலதிக கொடுப்பனவும்,

குண்டசாலை பிரதேச செயலகத்தில் ஐந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூபா 1,935,900, நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூபா 465,300, பாததும்புர பிரதேச செயலாளர் பிரிவில் ஒன்பது ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூபா. 86, 95 மேலதிக கொடுப்பனவாக ஓய்வூதியம் மற்றும் ஊனமுற்றோர் கொடுப்பனவு ஆகிய இரண்டிற்கும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(கி) ஓய்வூதியம் பெறுபவரின் மரணம், சான்றளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்கள் கிடைக்காமை, ஓய்வூதியத் திருத்தம் தாமதம் ஆகிய காரணங்களால் குளியாப்பிட்டிய (கிழக்கு), ரிதீகம, கம்பஹா, குண்டசாலை, களனி மற்றும் பியகம பிரதேச செயலகங்களில் 50 ஓய்வூதியர்களுக்கு ரூபா 10,511,788 மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுபவரின் மரணம், ஓய்வூதியத்தை கணக்கிடுவதில் பிழைகள், சிவில் ஓய்வூதியம் பெறும் போது ஊனமுற்றோர் ஓய்வூதியம் பெறுதல் ஆகியவை ஓய்வூதிய தரவுத்தளத்தை புதுப்பிக்கவில்லை.

(கீ) (அ) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் உயிரிழந்த ஓய்வூதியர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ஓய்வூதியத்தை மீளப்பெறுவதில் ரூபா 172,279 பற்றாக்குறை கணக்கீடு காணப்பட்டது.

### 3.5.2 ஓய்வூதியம் வழங்குவதில் பின்வரும் பொதுவான குறைபாடுகள் காணப்பட்டன

(அ) ஓய்வூதியம் பெறுபவருக்கு வழங்கப்படும் பணிக்கொடையானது அரசாங்கத்திற்கான நிலுவைத் தொகையை வசூலிக்க போதுமானதாக இல்லாத சூழ்நிலையில், மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து நிலுவைத் தொகைகள் முறைமை மூலம் அறவிடப்பட்டு அந்தந்த நிறுவனத்திற்கு அனுப்பப்படும். 2021 செப்டெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு வவுச்சர்களில் இருந்து இது போன்ற 05 சம்பவங்களை அவதானிக்க முடிந்தது. ஓய்வூதியம் பெறுபவர் திடீரென இறந்தால் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை வசூலிக்க முடியாத அபாயம் இருப்பதால், இது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களம் அந்தந்த நிறுவனங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறிமுறையை தயாரிக்கவில்லை.

(ஆ) வத்தேகம நகரசபையில் வருவாய் மேற்பார்வையாளராகப் பணியாற்றிய அலுவலர் ஒருவர் 2010 மே 23ஆம் திகதிதி மரணமடைந்தார். எனவே, வத்தேகம நகரசபை மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகையை அறவிட்டதுடன் மீதி ரூ.237,492 தொகை 2023 மார்ச் 02 அன்று திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் அவரது முதல் திருமணத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்துக்கு பின் முறான தீர்வை வழங்கப்பட்ட பின்னரான இறுதி ஆணையான முற்றான தீர்வை வழங்கப்படாததால், மீதித் தொகை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிமை வழங்கப்படாமல் திணைக்களத்தில் தக்கவைக்கப்பட்டது.

மேலும், முதல் திருமணத்தின் இரு மூத்த குழந்தைகளுக்கும் 50-2010711 மற்றும் 50-2010712 என்ற ஓய்வூதிய இலக்கங்களின் கீழ் தலா 50 சதவீதம் ஓய்வூதியம்வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், மூத்த குழந்தைக்கு உரிய வயது முடிந்ததும், மூத்தவரின் பங்கான ரூ.500,400 ஐ இளைய குழந்தைக்கு சேர்க்காமல் 2019 ஜனவரி 1 முதல் 2022 டிசம்பர் 09 வரை ஓய்வூதியம் வழக்கம் போல் வழங்கப்பட்டது.

(அ) 27 ஜனவரி 1997 அன்று 24-71678 ஐக் கொண்ட ஒரு ஊனமுற்ற ஓய்வூதியர் செய்த கோரிக்கையின்படி, 2000 ஜனவரி 08 ஆம் திகதிய கொடைப்பத்திரத்தின் மூலம் 1990 பிப்ரவரி 1 முதல் ஊனமுற்றோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

- எவ்வாறாயினும், அவர் 1990 ஜூலை 23 அன்று போக்குவரத்துச் சபையின் களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றிய போது பயங்கரவாதத் தாக்குதலால் ஊனமுற்றார் மற்றும் 1988 ஜூலை 13 திகதிய 21/88 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி அவர் போக்குவரத்து சபையிடமிருந்து ஒரு கொடுப்பனவைப் பெற்றிருந்தால், அவர் தனது 32 முதல் 55 வயது வரை ஊனமுற்றோர் ஓய்வூதியத்தையும் பெற்றிருந்தார் என்பது கவனிக்கப்படுகிறது..
- நிதி ஒழுங்குமுறை 104 இன் பிரகாரம் விசாரணை நடத்துமாறு அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவித்த போதிலும், 2022 ஆகஸ்ட் 05 இலிருந்து 03 வருடங்கள் கடந்த பின்னரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
- இதன்படி, 1990 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2018 பெப்ரவரி 09 ஆம் திகதி வரை கொடுப்பனவுடன் கூடிய ஊனமுற்றோர் ஓய்வூதியம் ரூபா 2,877,159 வீதம் முறையற்ற முறையில் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.5.3 பின்வரும் உண்மைகள் தரவுத்தளத்தின் பலவீனங்களாக அவதானிக்கலாம்**

அ. கம்பஹா பிரதேச செயலகப் பிரிவில், இரண்டு வெவ்வேறு தேசிய அடையாள அட்டை இலக்கங்களின் கீழ் ஒற்றை ஓய்வூதியர்கள்/ தங்கிவாழ்வோர் ஓய்வூதியம் பெறுகின்றமை 04 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

ஆ. குளியாப்பிட்டிய பிரதேச செயலகத்தில் 21-400006 ஓய்வூதியத்திற்கான மேலதிக கொடுப்பனவு ரூபா 424,925 எனக் காட்டப்பட்ட போதிலும், 2021 மார்ச் 01 ஆம் திகதி இல் ஆரம்பிக்கப்பட்ட 17,625 ரூபாயுடன் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான 52,875 ரூபாவைச் சீர்படுத்தாமல் தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதிகப் பணம் திரும்பப் பெறுதல் குறித்த அறிக்கையின்படி, அக்டோபர் 2022-ல் அதிகப் பணம் செலுத்தியதற்கான அறவீடு பதிவாகியுள்ளது, இருப்பினும், நவம்பர் 2022-ல் இந்த மீட்டெடுப்புகளின் விவரங்கள் தரவுத்தளத்திலிருந்து நீக்கப்பட்டன.

இ. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் இறந்த இரண்டு ஓய்வூதியர்களுக்கு 2022 ஆகஸ்ட் 16 முதல் கணக்காய்வுத் திகதி வரை ரூ.3,434,597 அதிகமாக செலுத்தப்பட்டது தரவுத்தளத்தில் அவதானிக்கப்பட்டது.

ஈ. 08 பிரதேச செயலகங்களின் தரவுத்தளங்கள், ஓய்வூதியம் பெறுபவரின் பிறந்த திகதியை உள்ளிடாத 12 சம்பவங்கள், ஓய்வூதியம் பெறுவோருக்கு உயிர் வாழ்ச் சான்றிதழை சமர்ப்பிக்காத 207 சம்பவங்கள், ஓய்வூதியரின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை உள்ளிடாத 21 சம்பவங்கள், ஓய்வூதியம் பெறுபவர் இறந்த திகதியை உள்ளிடாதது 02 சம்பவங்கள்., உயிர் வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதைப் புறக்கணித்த 24 சம்பவங்கள், பிறந்த திகதியுடன் தேசிய அடையாள அட்டை எண்ணை பொருந்தாத 07 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன.

## 4 நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணல்

2030 ஆம் ஆண்டிற்குள் அடையக்கூடிய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் ஓய்வூதியத் திணைக்களம் ஒரே ஒரு நோக்கத்தை மட்டுமே அடையாளம் கண்டுள்ளது.

அதற்கான தெளிவான இலக்குகள் அமைக்கப்படவில்லை மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அடிப்படை தரவு மற்றும் குறிகாட்டிகள் முறையாக நிறுவப்படவில்லை. நிலையான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதில் நிறுவனத்தின் பங்கில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களும் அடையாளம் காணப்படவில்லை.

**5 உள்ளகக் கணக்காய்வு**

(அ) உள் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு செயல்பாடுகள் பொதுவாக மற்ற உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளைத் தவிர, 125 வீதம் முன்னேற்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள 04 உள்ளகப் பிரிவுகளில் திணைக்களசார் உள்ளக நிகழ்ச்சிகள் மூலம் மூழ்கியுள்ள குறைபாடுகளைக் குறைப்பதற்கான செயல் திட்டத்தின் படி இயக்கப்பட்டுள்ளது, எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட சில உள் பிரிவுகளின் செயல்பாடுகளில் முன்னேற்றம் கண்டறியப்படவில்லை.

(ஆ) நி.ஒ.134(3) இன் அடிப்படையில், உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றாலும், 2022 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்படவில்லை.

**6 மனித வள முகாமைத்துவம்**

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஓய்வூதியத் திணைக்கள ஆளணி விபரம் பின்வருமாறு.

| ஆளணி வகை | அனுமதிகப்பட்ட ஆளணி | உள்ள ஆளணி | வெற்றிட/ மேலதிக ஆளணி |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 30 | 26 | 4 |
| மூன்றாம் நிலை | 11 | 7 | 4 |
| இரண்டாம் நிலை | 1076 | 1045 | 31 |
| அடிப்படை நிலை | 75 | 43 | 32 |
| அமயம் | - | 3 | 1 |
| ஒப்பந்தம் | 6 | 1 | 5 |

எம்.டி.ஐ.கமகே
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்க்கு

எனது.இல. எல்.எஸ்.டபிள்யு/பி.எஸ்பி.எவ்/02/23/17 2022 மே 10

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவிற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

## 1. நிதிநிலை அறிக்கைகள்

### 1.1 தகுதிவாய்ந்த கருத்து

ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2022 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளின் மீதான கணக்காய்வு வருவாய் மற்றும் செலவு கணக்கை உள்ளடக்கியதுடன் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் மற்றும் 2022 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் ஆகியவை, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (3) ஆம் பிரிவன் ஏற்பாடுகளிற்கமையவும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசையவும் எனது வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவன் ஏற்பாடுகளுக்கு இசைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி, தகுதிவாய்ந்த கருத்தின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எற்படும் விளைவுகள் தவிர, நிதிநிலை அறிக்கைகள் 31 டிசம்பர் 2022 நிலவரப்படி திணைக்களத்தின் நிதி நிலை மற்றும் அதன் நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றது. இலங்கையில் பொதுத்துறையின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க ஆண்டு முடிவடைந்தது.

### 1.2 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

தனிப்பட்ட கணக்குகள் மற்றும் உறுப்பினர்களின் பதிவுகளைக் கணக்காய்வு நோக்கங்களுக்காக சமர்ப்பிக்காததன் விளைவாக, பங்களிப்புக் கணக்கு ரூ.351,699,361 மற்றும் பங்களிப்பு நிலுவைத் தொகை ரூ.7,460,120 ஆகியவை முறையாக அங்கீகரிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த கணக்காய்வு தரநிலைகளின் கீழ் எனது பொறுப்பு, நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

### 1.3 நிதி அறிக்கைகள் மீது நிர்வாகத்தினதும் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்ட தரப்பினரதும் பொறுப்புகள்

இலங்கையின் பொதுத்துறையின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ப பிழையான அறிக்கைகள் எதுவுமின்றி நிதி அறிக்கைகளை உருவாக்குவதற்கும் நியாயமாக முன்வைப்பதற்கும் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையைத் தீர்மானிப்பது முகாமைதைதுவத்தின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் போது, நிதியைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு முகாமைதைதுவம் பொறுப்பேற்க வேண்டும், முகாமைதைதுவம் நிதியைக் கலைக்க அல்லது செயல்பாடுகளை நிறுத்த உத்தேசித்திருந்தால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு எந்த யதார்த்தமான மாற்றமும் இல்லை எனில், நிதியின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கும், கணக்கியல் மற்றும் தேவையான உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டும்.

நிதியின் நிதியியல் அறிக்கையின் செயல்முறையை விசாரிக்கும் பொறுப்பு, நிதியைக் கட்டுப்படுத்தும் தரப்பினரிடம் இருக்கும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைய நிதி மற்றும் வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்க வேண்டியது அவசியம்.

### 1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகள் தவறற்ற அறிக்கைகளாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் சுருக்க அறிக்கையை வெளியிடுவதே எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வானது எப்பொழுதும் பொருள் தவறாகக் கண்டறியப்படும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம் மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் அவை செல்வாக்கு செலுத்தும் என்று நியாயமாக எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் இக் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை மதிப்பீட்டை கடைப்பிடிக்கிறேன் என்பதுடன் தொழில்முறை சந்தேகத்தை பராமரிக்கிறேன். எனக்கும் கூட:

- மோசடி அல்லது பிழையின் காரணமாக, நிதிநிலை அறிக்கைகளில் பொருள் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்தப்பட்டது. மேலும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறதல். மோசடி, கூட்டு மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்பு, தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதால், மோசடியின் விளைவாக

ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாக உள்ளது.

- நிதியின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாது சூழ்நிலைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியின் உள்ளக கட்டுப்பாட்டைப் பற்றிய புரிதலைப் பெறுதல்.
- முகாமைத்துவ வெளிப்பாடுகள் மற்றும் நிதி அறிக்கைகள் நியாயமான வெளிப்படுத்தலை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பது உட்பட நிதிநிலை அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தல்.
- நிலவும் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிதியின் தொடர்ச்சியான இருப்பு குறித்த நிச்சயமற்ற தன்மையின் அடிப்படையில் பெறப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கியல் நோக்கங்களுக்காக நிதியின் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையைப் பயன்படுத்துவதற்கான சரியான தன்மை குறித்து முடிவு எடுக்கப்பட்டது. நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பதை நான் தீர்மானித்தால், நிதிநிலை அறிக்கையில் உள்ள இது போன்ற தொடர்புடைய வெளிப்பாடுகள் குறித்து எனது கணக்காய்வு அறிக்கை அனுப்பப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லை என்றால், எனது கருத்தை நான் மாற்றியமைக்க வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக தொடர்ச்சியான இருப்பு நிறுத்தப்படும்.
- ஒட்டுமொத்த விளக்கம், கட்டமைப்பு மற்றும் நிதிநிலை அறிக்கைகளின் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான விளக்கத்தை பெறும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

முக்கிய உள் கட்டுப்பாடு மற்றும் பிற விடயங்களில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட குறித்த கணக்காய்வு கண்டுபிடிப்புகள் தொடர்பாக தொடர்புடையவர்களை கட்டுப்படுத்துவது பற்றிய விழிப்புணர்வை நான் எழுப்பியுள்ளேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தேவைகளுக்கான சிறப்பு விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

- நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d)(iii) ஆம் பிரிவின் இன் தேவையின்படி நிதிநிலை அறிக்கைகள் முந்தைய ஆண்டோடு ஒத்துப்போகின்றன.
- வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iv) இல் உள்ள தேவையின்படி, முந்தைய ஆண்டுகளில் நான் செய்த பரிந்துரைகள் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 3. செயல்பாட்டு ஆய்வு

### 4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்காதவை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| குறிப்பு/சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு ஒழுங்கு | அவதானிப்பு |
|---|---|
| 1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இல. பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம்<br>(i) கட்டளை இல. 04 | ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தில் திரட்டப்பட்ட நிதியில் இருந்து ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் இருப்பினும் பங்களிப்புகளை அறவீடு செய்வதற்கும் செலுத்துவதற்கும் நிதிக்காக தனி வங்கி கணக்கு பராமரிக்கப்படாமல் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் பங்களிப்பு சேகரிப்புகள் மற்றும் மீள் கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டன. |
| (ii) கட்டளை இல. 9 (அ) | பங்களிப்பைச் செலுத்தத் தகுதியுடையவர்கள் மற்றும் பணம் செலுத்தும் நபர்களுக்குப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. 09 மாகாணங்களில் 06 மாகாணங்களினால் மாத்திரமே நிதியத்திற்கு இந்தப் பங்களிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மாகாணங்களில் இருந்து பங்களிப்புக்கள் பெறப்படாமைக்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை. |

**3.2. முகாமைத்துவ செயற்பாடுகள்**

உறுப்பினர்களின் பெயர், பாடசாலை உள்ளிட்ட உறுப்பினர் ஆவணங்களின் பட்டியல் பராமரிக்கப்படாததால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் புதிதாக இணைந்த உறுப்பினர்கள், நிதியின் உண்மையான தொகை, பற்றுச் சீட்டுகள், நிலுவைத் தொகைகள், நிதியத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் நிதியிலிருந்து வெளியேறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைத் துல்லியமாகக் கண்டறிய முடியவில்லை.

**டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன,**
**கணக்காய்வாளர் நாயகம்.**

எனது.இல. எல்.எஸ்.டபிள்யு/பி.எஸ்பி.எவ்/02/23/00 2022 யூன் 14

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்,
ஓய்வூதியத் திணைக்களம்.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவிற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆசிரியர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

---

**1. நிதிநிலை அறிக்கைகள்**

**1.3 தகுதிவாய்ந்த கருத்து**

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2022 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிலை அறிக்கை, வருமானம் மற்றும் செலவினக் கணக்கு, பின்னர் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்பாய்சல் அறிக்கை மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உட்பட நிதிநிலை அறிக்கையின் குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க தேசிய 19 கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின்) 154 3) ஆம் பிரிவன் கீழ் எனது வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளப்பட்டது . இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவன் ஏற்பாடுகளுக்கு இசைய எனது அறிக்கை உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி, தகுதிவாய்ந்த கருத்தின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களால் எற்படும் விளைவுகள் தவிர, நிதிநிலை அறிக்கைகள் 31 டிசம்பர் 2022 நிலவரப்படி திணைக்களத்தின் நிதி நிலை மற்றும் அதன் நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றது. இலங்கையில் பொதுத்துறையின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க ஆண்டு முடிவடைந்தது.

**1.4 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை**

தனிப்பட்ட கணக்குகள் மற்றும் உறுப்பினர்களின் பதிவுகளைக் கணக்காய்வு நோக்கங்களுக்காக சமர்ப்பிக்காததன் விளைவாக, பங்களிப்புக் கணக்கு ரூ.351,699,361 மற்றும் பங்களிப்பு நிலுவைத் தொகை ரூ.7,460,120 ஆகியவை முறையாக அங்கீகரிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த கணக்காய்வு தரநிலைகளின் கீழ் எனது பொறுப்பு, நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் எனது தகுதிவாய்ந்த

கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

### 1.3. நிதி அறிக்கைகள் மீது நிர்வாகத்தினதும் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்ட தரப்பினரதும் பொறுப்புகள்

இலங்கையின் பொதுத்துறையின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ப பிழையான அறிக்கைகள் எதுவுமின்றி நிதி அறிக்கைகளை உருவாக்குவதற்கும் நியாயமாக முன்வைப்பதற்கும் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையைத் தீர்மானிப்பது முகாமைதைதுவத்தின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் போது, நிதியைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு முகாமைதைதுவம் பொறுப்பேற்க வேண்டும், முகாமைதைதுவம் நிதியைக் திரவநிலையாக்க அல்லது செயல்பாடுகளை நிறுத்த உத்தேசித்திருந்தால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு எந்த யதார்த்தமான மாற்றமும் இல்லை எனில், நிதியின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கும், கணக்கியல் மற்றும் தேவையான உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டும்.

நிதியின் நிதியியல் அறிக்கையின் செயல்முறையை விசாரிக்கும் பொறுப்பு, நிதியைக் கட்டுப்படுத்தும் தரப்பினரிடம் இருக்கும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைய நிதி மற்றும் வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சரியான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்க வேண்டியது அவசியம்.

### 1.4. நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகள் பொருள் தவறற்ற அறிக்கைகளாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் சுருக்க அறிக்கையை வெளியிடுவதே எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வானது எப்பொழுதும் பொருள் தவறாகக் கண்டறியப்படும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழலாம் மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளில் அவை செல்வாக்கு செலுத்தும் என்று நியாயமாக எதிர்பார்க்கலாம்.

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் இக் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை மதிப்பீட்டை கடைப்பிடிக்கிறேன் என்பதுடன் தொழில்முறை சந்தேகத்தை பராமரிக்கிறேன். எனக்கும் கூட:

- மோசடி அல்லது பிழையின் காரணமாக, நிதிநிலை அறிக்கைகளில் பொருள் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்தப்பட்டது. மேலும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறதல். மோசடி,

கூட்டு மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்பு, தவறான விளக்கங்கள் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்து, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாக உள்ளது.

- நிதியின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாது சூழ்நிலைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியின் உள்ளக கட்டுப்பாட்டைப் பற்றிய புரிதலைப் பெறுதல்.
- முகாமைத்துவ வெளிப்பாடுகள் மற்றும் நிதி அறிக்கைகள் நியாயமான வெளிப்படுத்தலை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பது உட்பட நிதிநிலை அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்தல்.
